"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்" தாபிதம்: 1876

# சத்தியவேத பாதுகாவலன்

"கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு பங்குனிமீ 21-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 12-ம் இல.



தாவீதின்குமாரனுக்கு ஓசன்னா!

# நியூயோர்க் உலக சந்தைக் காட்சியில் வத்திக்கான் வீடு

இவ்வருடம் சித்திரை மாசம் 22-ம்திகதி ஆரம்பமாக இருக்கும் மாபெரும் நியூயோர்க் உலகசந்தைக் காட்சியில் வத்திக்கான் வீடு சகலரது கவனத்தையும் கொள்ளக்கூடியதாக அமைவு பெறுகின்றது. இதன் செலவுக்கென ஒதுக்கப்பட்டபணம் ஆங்கில நாணயத்தில் 1000,000 பவுணுகும். திருச்சபையானது உலகில் இன்றுசீவிக்கும் கிறீஸ்து நாதரே என்ற எண்ணத்தைக் காட்சிகளைக் காண்போரின் மனதில் பதித்துவிடத்தக்கதாக வத்திக்கான்வீடு நிறுவப்படுகின்றது. பரிசுத்த பாப்பரசரின் விசேஷ அனுமதியுடன் வத்திக்கான் நகரத்திலுள்ள பல கலைப் பொருட்கள் நியூயோர்க்நகரம் வந்து சேர்ந்துவிட்டன. வத்திக்கான்வீட்டின் காட்சியின் பொறுப்பும் அதனால் வரக்கூடிய பயனும் மிகப்பெரிதாக பாப்பரசர் கருதுவதனால் இக்காட்சிக்குத்தனதுவிசேஷ பிரதிநிதியாகக் கருதினல் மறெல்லா அவர்களை நியமித்திருக்கின்றார்.

## குருமாரின் உயர்தர இலத்தீன் கல்வியில் 6வதுசின்னப்ப பாப்பரசரின் கவனம்

வரப்போகும் காலங்களிலே சுயபாஷைகள் திருச்சபையின் வழிபாட்டு முறைகளில் உலகமெங்கும் பெரும்இடம் பெறப்போகின்றன வெனினும் லத்தீன் பாஷைக்குரிய இடம் ஒருபோதும் மறையப்போவதில்லை. குருமார் பெறவேண்டிய பயிற்சியில் மேல்நாட்டுப் புராதன பாஷைகளில் ஒன்ருகிய லத்தீனுக்குப் பிரதான இடம் உண்டு. முன்னிருந்த பாப்பரசர்மார் இதை என்றும் உணர்ந்து வந்திருக்கின்றனர். 2-ம் வத்திக்கான் சங்கத்தின் விளைவாக மாற்றங்கள்பல ஏற்பட்டபொழுதிலும் குருமாருக்கு வேண்டிய லத்தீன் பயிற்சி முன்னுட்களிலும் கூடிய முறையில் தேவைப்படுவதை 6-ம்சின்னப்ப பாப்பரசர் உணர்ந்து இருக்கின்ருர். ஆகவே, அதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. வத்திக்கானில் ஒருவிசேஷ லத்தீன் கல்லூரி நிறுவப்படுகின்றது. இதில் ஒரு குருமாணவன் கற்று லத்தீனில் முழுப் பாண்டித்தியம்பெற நாலுவருடங்கள் தேவைப்படும். 2-ம், 3-ம்வருட முடிவுகளிலும் அக்கல்விக்குஏற்ற பட்டங்கள் அளிக்கப்படும். லத்தீன் பாஷையுடன் அக்கல்விக்குத் துணையாக இருக்கும் கிரேக்ககல்வியும் பயிற்றப்படும். இக்கல்லூரியில் கல்விகற்பிக்க உலகில் சிறந்த ஆசிரியர் அழைக்கப்படுகின்றனர். இங்கே கல்விகற்கத்தகுந்த குருமாணவர்களை அனுப்பிவைக்குமாறு மேற்றிராணிமாரும், சந்நியாசசபை அதிபர்களும் கேட்கப்பட்டிருக்கின்றனர்

## போலாந்தில் தேவதாயாருக்கு மிதமிஞ்சிய பக்தியா?

"இல்லை" என்கிருர் போலாந்து தேசகருதினல் மின்சென்ரி அவர்கள். வார்சோநகரில் லூர்துதாயார் கோவிலில் அண்மையில் அவர்செய்தபிரசங்கத்தில்கத்தோலிக்க சமய உண்மைகளின் மதிப்பைப் போலாந்தில் கெடுக்கிறதற்காகச் சில விஷமிகள். அங்கே கிறிஸ்துநாதருக்குக் கொடுக்கும் மதிப்பிலும் தேவதாயாருக்குக் கூடிய மதிப்பைக் கத்தோலிக்கர்கள் செலுத்துகிருர்கள் என்ற குற்றச்சாட்டை ஆணித்தரமாக மறுத்துரைத்தார். இவ்வாறு எமது சமய விரோதிகள் கூறுவதற்குக்காரணம் உண்டு என்றும் அது எதுவெனில் போலாந்து தேசத்தில் சமயப்பற்று அவர்கள் விரும்புவதுபோல தேய்ந்து தேய்ந்து போகாது வளர்ந்து வளர்ந்து வருவதேயாகும் என்று எடுத்துக்காட்டினர். "நாம் தேவதாயார்மூலம் கிறிஸ்துநாதரிடம் செல்வதைக்காண அவர்கள் மனம் புழுங்குகின்றது. ஆகவே, தேவதாயின் பக்தியில் அவர்கள் கைவைக்கப்பார்க்கிருர்கள். போலாந்துதேச மேற்றிராணிமார்களை இதற்காகத் தூற்றுகிருர்கள். நாம் இதைக் கவனிக்கப்போவதில்லை. எமக்குத்துணையாக இருக்கும் தேவதாயாரின் உதவியற்று நாம் தவிப்பது அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடும். அவர்களை மகிழ்விப்பதற்காக நாம் சத்திய திருச்சபையின் போதனைகளில் வழுவப் போவதில்லை" என்ருர் கருதினலவர்கள்.

## பூசைப்பலி நன்குகாண 5 துணைகள்

1. திருச்சபையின் வழிபாட்டு முறைகள் யாவற்றுள்ளும் முதல் இடம் வகிப்பது திவ்விய பூசைப் பலியே என்ற எண்ணம் பூசை காணப்போகும் விசுவாசிகள் மனதில் இருக்கவேண்டும். எவ்வகைத்தான தருமங்களோ, செபதபங்களோ பூசைப்பலிக்கு ஒப்பாகா.

2. திவ்விய பூசைப்பலி என்ருல் என்ன என்பதைப் பூசை தொடங்குமுன்பு சற்றுத் தியானிப்பது நன்று. தேவன் கல்வாரிமலையில் எமது இரட்சணியத்துக்காகத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தாரல்லவா? உலகில் ஒப்புக்கொடுக்கப்படும் ஒவ்வொரு பூசையும் அப்பலியே.

3. குருவானவர் ஒப்புக்கொடுக்கும் பலியை நாமும் அவருடன்சேர்ந்து ஒப்புக்கொடுக்க வேண்டும். குருவானவர் பீடத்தில் நடத்தும் செய்கைகள் ஒவ்வொன்றையும் நாமும் மனதில் அவருடன் செய்யவேணடும். பீடத்தில் நிற்கும் குருவானவர் ஒரு பிரதிநிதி. அவர் அங்கே யேசுநாதரின் பிரதிநிதிமாத்திரமல்ல, எமது பிரதிநிதியுமே.

4. எமது பாவங்களின் பரிகாரத்துக்காக, பரம தேவனுக்கு யேசுக்கிறிஸ்துநாதரையே பலியாக நீசராகிய நாம் ஒப்புக்கொடுக்கின்ருேம் என்ற சிந்தனை பூசைநேரத்தில் இருக்கவேண்டிய பிரதான எண்ணமாகும்.

5. நாம்காணும் பூசையில் சற்பிரசாதம் உட்கொள்ளுவது அப்பூசையில் நமது பங்கைப் பூர்த்திசெய்துவிடுகின்றது.

## பிறசமயத்தவர்களை அஞ்ஞானிகள் என்று கூறவேண்டாம்

"கத்தோலிக்கரல்லாத பிறசமயத்தவர்களை அஞ்ஞானிகளென்று முன் சிலகாலங்களில் நாம் கூறிவருதல் ஒற்றுமை இயக்கத்துக்கு உகந்ததல்ல, நாம் பிழைகள் செய்துவந்திருந்தால் மேலும் அவற்றைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்று கொள்வது மடமையல்லவா" இவ்வாறு மைக்கல் பேர்ளி என்னும் யேசுசபைக் குருவானவர் ஆங்கில நாட்டிலே கோர்க் நகரத்திலே அண்மையில் கூறினர். அவர் அங்கு கூறியது எமது நாட்டிலும் மிகப் பொருத்தமல்லவா?

## பாப்பரசரின் திருயாத்திரை ஆங்கிலேயருக்கு அளித்தபயன்

சமீபத்தில் பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பர் ஜெருசலேமுக்குச் செய்த திருயாத்திரையினுல் பலநன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவசபைகளுள் பரஸ்பர மதிப்பும், ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்பட்டிருப்பது கண்கூடு. மேலும் ஏற்பட்டிருக்கும் பல நன்மைகளுள் ஆங்கில மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. ஜோர்தான் தேசத்தில் 2-ம் மொழியாக ஆங்கிலம் பேசப்பட்டுவருவதால் இதை அறியவந்த ஆங்கிலமக்கள் ஜோர்தான் தேசம்சென்று அங்கு ஏதேனும் வேலைபார்க்கவோ மக்களுக்குத் தொண்டாற்றவோ விரும்பிக் கத்தோலிக்க பத்திரிகைகளுக்குஎழுதிவருகின்ருர்கள். வேலைகளுக்குத் தகுதியுடையவர்களை ஜோர்தான் அரசாங்கம் நன்றியுடன் வரவேற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்துகாய வரம்பெற்ற.....

(-ம்7 பக்கத் தொடர்ச்சி)

கும், நிகழ்காலத்தை உமது அன்புக்கும், வருங்காலத்தை உமது பராமரிப்புக்கும் ஒப்படைக்கிறேன். கடவுளைப் புகழ்வதிலும் ஆத்துமஈடேற்றத்திலும் செலவிடும் நேரம் ஒருக்காலும் வீணாகாது."

பிறகு நாங்கள் "Casa sollievo di Sofferenza" என்னும் துன்பம் நீங்கிச் சுகம் நல்கும் மனை"க்குச் சென்றோம். இது தற்காலவசதிகள் அமைந்த ஒரு மருத்துவநிலையம். யாத்திரிகர்கள், நண்பர்கள் அளித்த காணிக்கைப்பொருள், நன்கொடைகளைக் கொண்டு சுவாமி பீயோ அவர்கள் இந்நிலையத்தைத் தோற்றுவித்தார்கள். பலபகுதிகள் அமைந்த பல மாடிக் கட்டிடம் இந்த மருத்துவமனை. 35 கன்னியரும் பல மருத்துவ மாதரும் 30டக்ற்ர்மாரும் சிகிச்சைபெற வரும் நோயாளர்களைக் கவனிக்கின்றனர். மருத்துவநிலையப் பிரிவுகள் பலவற்றை நாங்கள் பார்வையிட்டபோது நோயாளர்களுக்கு உற்சாகமூட்டி அவர்களுக்கு எங்கள் ஆசீரை அளித்துச் சென்றோம். அந்த மருத்துவ நிலையத்தில் சகோதர அன்பு நடைமுறையில் அனுசரிக்கப்படுவதை நேர்முகமாகக் கண்டோம். பிறகு நாங்கள் துறவற இல்லம் திரும்பினோம்.

சுவாமி பீயோ அவர்கள் ஒருபுனிதர் என்பதை யாம் மறுக்கமுடியாது. அவர் ஒரேநேரத்தில் இரண்டு இடங்களில் இருந்ததுபற்றிய இரண்டு நிகழ்ச்சிகள் என்மனதைக் கவர்ந்தன. போரில் தோல்வியடைந்த ஒரு தளபதி தற்கொலைசெய்ய எத்தனித்தார். பீயோ சுவாமிகள் அத்தளபதியின் போர்க் கூடாரத்தில் தோன்றி: "தளபதியே, நீர் இந்த அறிவுகெட்ட செயலைத் தவிர்க்க வேண்டும்" என்று கூறி அவரைக் காப்பாற்றினார். அதே சமயத்தில் சுவாமி பீயோ துறவற இல்லத்தைவிட்டு நீங்கவில்லை. இது அவர் ஒரேநேரத்தில் இரண்டு இடங்களில் இருந்ததற்கு ஒரு சான்று. வேறொரு சமயம் பீயோ சுவாமிகள் தென் அமெரிக்காவில் சால்த்தோ என்னும் மேற்றிராசனத்தில் தோன்றி அம்மேற்றிராசன விக்கார்ஜெனரல் மொன்சிஞ்ஞோர் தமியான் அவர்களை அடுத்துவந்த மரணத்தைப்பற்றி அவரின் நண்பர்களுக்கு அறிவித்தார். சுவாமி பீயோ தமக்கு அறிமுகமான மொன்சிஞ்ஞோர் தமியான் அவர்களின் மரணப்படுக்கையில் அவருக்கு உதவுவதாக வாக்களித்திருந்தார். அத்தருணத்திலும் சுவாமி பீயோ இத்தாலியிலுள்ள தம் துறவற இல்லத்தைவிட்டு நீங்கவில்லை.

சுவாமி பீயோ அவர்களின் காயங்களிலிருந்து வரும் இரத்தத்தைப்பற்றித் தனிச்சிறப்புக்குரிய ஒரு விஷயம் உண்டு. இந்த இரத்தத்தில் ஒருவித நறுமணம் நெடுநேரம் கமழ்கிறது. மக்கள் உபயோகிக்கும் வாசனைப்பொருள்களின் மணமாக இருக்கலாம் என்று சிலர் தவறுதலாக எண்ணியதுமுண்டு. இவ்வித நறுமணம் இரத்தத்திலிருந்து எழுவது மருத்துவ மேதைகள் விளக்க முடியாத ஒரு புதிராகும்.

1947-ம் ஆண்டு பிறவியிலே குருடான ஜெம்மா என்னும் பெயருள்ள ஒரு பெண் சுவாமி பீயோ அவர்களின் கரங்களால் நன்மைவாங்கிய பின் புதுமையாகக் கண்பார்வை அடைந்தாள்.

சிலவேளைகளில் பாவசங்கீர்த்தனம் செய்வோர் தங்களின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்வதற்கு முன்னமேயே அவர்களின்பாவங்களைச்சுவாமிபீயோ சொல்லிவிடுகிறார். சிலவேளைகளில் புத்தகம் படிப்பதுபோல் மக்களின் இருதயங்களைப் படித்து அறிகிறார்.

அவரின் காயங்களால் அவருக்கு அகோர வேதனை உண்டாகிறது. எனினும் அதைப் புன்முறுவலோடு பொறுத்துக்கொள்ளுகிறார்.

நாங்கள் போவதற்கு முந்தினநாள் வத்திக்கான் சங்கத்திலிருந்து பத்து மேற்றிராணிமார் சுவாமி பீயோ அவர்களைச் சந்தித்து அவரைத் தங்களுக்காக வேண்டிக்கொள்ளுமாறு கேட்பதற்காகச் சென்றிருந்தார்கள்.

பரிசுத்ததந்தை 15-ம் ஆசீர்வாதப்பர் சுவாமி பீயோ அவர்கள் உண்மையிலே "ஒரு கடவுளின் மனிதர்" என்று அடிக்கடி சொல்வது வழக்கம்.

உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் மக்கள் சுவாமி பீயோ அவர்களுக்கு எழுதித் தங்களின் தேவைகளில் தங்களுக்காகவேண்டிக்கொள்ளுமாறு கேட்கின்றனர். அவருடைய செயலாளர்கள் மக்கள் கடிதங்களில் குறிப்பிடும் எல்லாக்கருத்துக்களையும் அவருக்கு அறிவிக்கின்றனர். எல்லாக் கடிதங்களுக்கும் பதில் எழுதுவது முடியாத ஒருகாரியமாதலால் எழுதுவோர் பதிலை எதிர்பார்த்தல் கூடாது. அவருடைய முகவரி:

**San Giovanni Rotondo,**
Via Foggia,
Italy.

பார்க்கவேண்டிய இடங்கள் ஏறக்குறைய எல்லாவற்றையும் பார்த்துவிட்டோம். நவம்பர் 3-ம்நாள் கப்புச்சின் துறவிகளின் உணவறைக்கு அவர்களோடு பகல்உணவு அருந்தச்சென்றோம். சுவாமி பீயோ எங்களோடு உணவருந்தும் பேறு எங்களுக்குக் கிடைத்தது. அவர் பகல்உணவுக்கு மட்டும் உணவறைக்கு வருகிறார். அவருக்குக் கொஞ்சம் சூப்பும் பழங்களும் வழங்கப்பட்டன. மிகக் கொஞ்சமாகவே உணவு அருந்தினார். ஆனால் சாப்பாட்டு மேசையில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். தம் அருகில் இருந்தவர்களோடு உரையாடினார். சாப்பாடு முடிந்தவுடன் தம்மைக் காணவந்திருந்த மேற்றிராணி ஆண்டகை ஒவ்வொருவரிடமும் சென்று அவரின் விடைபெற்று அவரின் மோதிரத்தை முத்திசெய்தார். மறுமுறையும் என்கருத்துக்களை அவருக்கு எடுத்துக்கூறி என் மேற்றிராசனத்துக்காக வேண்டிக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டேன். பிறகு நாங்கள் சுவாமி பீயோ அவர்களிடமும் எங்களை அன்போடு உபசரித்த கப்புச்சின் துறவிகளிடத்திலும் பிரியாவிடை பெற்றோம். எங்கள் பஸ் சான் ஜொவான்னி ரொதோந்தோவிலிருந்து பிற்பகல் 1-45-க்குப் புறப்பட்டு போக்கியா வந்துசேர்ந்தோம். அங்கிருந்து நாங்கள் ரோமைக்கு இரயில் பிரயாணம் செய்தோம். பிற்பகல் 8-45-க்கு உரோமையிலுள்ள எங்கள் விடுதிக்கு வந்துசேர்ந்தோம். நாங்கள் மேற்கொண்ட மனோகரமான பிரயாணம் எங்களுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

[வேளாங்கண்ணி குரலொலி]


நுவரெலியாவில் தற்போது

நல்ல திறம்பூக்களுக்குப் பேர்பெற்ற

**எஸ். ஏ. பெர்னண்டோ**

அவர்களது

**பிரபல்ய பூக்கடைக்கு**

ஒருமுறை விஜயஞ்செய்யுங்கள்
உண்மை உணர்வீர்கள்

* * *

தபாற்பெட்டி இல. 16
தந்தி: பாத்திமா — தொலைபேசி: 283





**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்.**

இந்த உலகசீவியம் மறுமைச் சீவியத்திற்கு ஆயத்தம். உலகசீவியம் சொற்பகாலம். மறுமைச் சீவியம் முடிவில்லாதகாலம். நித்திய சீவியத்திற்கு ஆயத்தப்படுத்தும்படிதான் தபசுகாலத்தை அனுசரிக்கிறோம்.

தபசுகாலம் முடிந்து உத்தானநாள்வரும். அதற்கு எங்கள் ஆத்துமத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். பழைய, பாவம்நிறைந்த சீவியமாய் இராமல் புதிய, தேவனுக்கடுத்த வரப்பிரசாத சீவியமாய் இருக்கவேண்டும்.

அப்படியாயின் அதற்கு நீங்கள் எப்படி ஆயத்தப்படுகிறீர்கள்? புதிய சீவியமாக்க என்ன முயற்சி செய்கிறீர்கள்?

—அண்ணா.

## விருந்து "6"

### 5 கேள்விகள்:

1. அர்ச். லூக்காஸ் எத்தேசத்தைச் சேர்ந்தவர்?

2. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம் என்றும்..........தரும்.

3. குருடரே, எது பெரிது? காணிக்கையோ காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற.........

4. நாம் போசனம் அருந்துமுன் நன்றியறிந்த தோத்திரம் சொன்னால், அது சுவிசேஷத்தில் எந்த இடத்தை நமக்கு நினைவூட்டுகிறது?

5. உமது நண்பரொருவருடைய விருந்துக்குச் சென்று பந்தியின்முன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டீர். ஆனால், உமது நண்பனுக்கு மிகவும் வேண்டிய இன்னுமொரு நண்பனுக்கு இடமளிக்கும் படியாக நீர் எழுந்து பின் பந்திக்குப் போக நேரிட்டது. அப்போது யேசுநாதர் கூறிய ஏதோ வாக்கியம் உமது நினைவுக்கு வந்தது; அது என்ன?

**நிபந்தனைகள் வழமைபோல்**

அஞ்சல் அட்டையில் எழுதாமல் மூடிய தபாலில் அனுப்பும் விடைகள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

முடிவு திகதி 28-3-64.

* * *

**சிறுவர்விருந்து அங்கத்தினர்**

சிறுவர்விருந்தில் அங்கத்தினராகச் சேரவிரும்பும் 16வயதிற்குட்பட்ட தம்பி, தங்கைகள் கீழ்வரும் பத்திரத்தைப் பூர்த்திசெய்து. அஞ்சல் அட்டையில் ஒட்டி, அண்ணா, சிறுவர் விருந்து காவலன் அலுவலகம், தபா. பெ. இல. 2. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதவும்.

சிறுவர் விருந்து
அங்கத்தவர் மனுப்பத்திரம்
பெயர் செல்வன்/செல்வி ........
..........................................
முகவரி....................................
..........................................
பிற. திக...................................

## அங்கத்தவர் வரிசையிலே....

B 305 செல்வி தெரேசம்மா, எட்டியாந்தோட்டை.
„ 306 செல்வன் பீ. ஏ. முத்துப்பிள்ளை, உனுப்பிட்டி.
„ 307 „ மா. மரியநாயகம், முள்ளிவாய்க்கால்.
„ 308 „ ஏ. ஜெயதாஸ் மிராண்டா, வங்காலை.
„ 309 „ ஏ. யோகருமார், அடப்பன்வீதி.
„ 310 „ செ. இரதையசாமி, நாகசேனை.
„ 311 செல்வி எமா றமணி பெனடிற், யாழ்ப்பாணம்.
„ 312 செல்வன் எஸ். எஸ். அந்தோனிப்பிள்ளை, இளவாலை;
„ 318 செல்வி ஞா. அல்வீனு டயஸ், பேசாலை.
„ 314 „ ச. கெலன், மிருசுவில்.
„ 315 „ டபிள்யு. பிறிஜெட் திரேசா லோவ், சிலாபம்.
„ 316 „ ஆ. பத்திமா டயஸ், பேசாலை.
„ 317 செல்வன் ப. ஜெறோம், பேசாலை.
„ 318 „ ச. பிலேதியஸ் டயஸ் பேசாலை.
„ 319 „ ப. டெனிஸ் லெம்பேட், பேசாலை.
„ 320 செல்வி த. இராக்கினி பீரிஸ், மன்னார்.
„ 321 செல்வன் லீனஸ் புஸ்பாகரன், மாதகல்:
„ 322 „ பி. அமலதாஸ், யாழ்ப்பாணம்.
„ 323 செல்வி சத்தியசீலி அம்புறோஸ், கரவெட்டி.
„ 324 செல்வன் அ. விஜயரெட்டினம், கரவெட்டி.
„ 325 „ ச. நீக்கலாஸ் சில்வா, வங்காலை.
„ 326 „ ப. செபஸ்தியான் ஜெயன்குலாஸ் வங்காலை:
„ 327 „ சா. தவசெல்வம், பாஷையூர்.
„ 328 செல்வி மேரி நீற்ரு மேரியன் கொழும்பு, 13.
„ 329 செல்வன் ம. ஆபேல் றெவ்வல், வங்காலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்தர் பாவியின் காதலர்

கற்பனையால் எழுந்த காட்சியல்லாது, கண்காணும் நிகழ்ச்சிகள் பல. ஞானத்திற்கும், அறியாமைக்கும் வேறுபாடு; கடவுளுக்கும், சிருஷ்டிக்கும் மத்தியில் பெரிய இடைவெளி; பரிசுத்தத்திற்கும்பாவிக்கும்தொடர்பில்லை. அப்படியானால் மனிதசிருஷ்டி பழுதுற்ற பாவியாகி, தூய்மையற்ற நிலையில் இருக்கும்பொழுது தூய்மையின் கடவுளை அணுகுவதெப்படி? மேட்டுநிலத்தில் நீர்ப்பெருக்கு மிகுதியாய் இருக்கும்போது, தானகவே நீர் தாழ்ந்தபரப்பை நோக்கி ஓடி அடைகிறது. அதேபோல் பரமன் தூய்மையின் கரைகாணாத சமுத்திரமாவார்.

சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டப் பொதுநலனைக்கருதி அரசு கடும்நீதியை மேற்கொள்ளத்தான் வேண்டும். இருந்தும், நீதியில் இறங்குமுன் சற்று இரக்கம்காட்டுவது உயர்ந்த பண்பாடென்று எல்லோரும் அறிவர். அதே நேரத்தில் கொட்டக் கொட்டக் குளிக்கிறவன் முட்டாள் என்பதைநம்பி, அதைக் கிரிகைகளில் காட்டுகிறவர்களும் பலர். ஏனெனில், கண்காணாத ஏரிக்கும் ஒரு கரைவேண்டும் என்றனர். ஆனால், மண்காணாத இரக்கத்தைத் தோற்றுவிக்கப் பிறந்தார் எம்பெருமான் யேசு. மாட்சிக்கோலம் துறந்து, நம் மாநிலத்தில் மாந்தனாய்க் காட்சிதந்தார் வேந்தர். சாந்தமே உருவெடுத்து எம்தேவன் பழிஎன்னும் பாதகத்தை அடியோடுஒழிக்க வழிவகுத்தார். தூய்மையானது அன்புப்பெருக்கு மேலிட்டபோது கருணை வடிவெடுத்துப் பாவியின் தாழ்ந்த உள்ளத்தை வந்தடைகின்றது.

கடவுள், மனிதனான யேசு பாவிகளான மக்களைத்தேடிவந்து அவர்கள் தேவையைப் பூர்த்திசெய்தார். கறைபடிந்த ஆன்மாவைப் புனிதமாக்கினார். விபசாரி, ஏமாற்றுக்காரி அட்டூழியங்கள் செய்து, மரணத்தின் வாயிலில் நின்றுகொண்டிருக்கும் பொழுது அவளின் இறுதிமூச்சைத் தேடிக்கொண்டு விரைந்துசெல்கின்றார் ஒரு குரு. கல்நெஞ்சம்படைத்த ஒரு கொடியவன் மாசற்ற ஒருவனைக் கொன்றுவிட்டு, தூக்குமேடையில் நின்றுகொண்டிருக்கும்போது இவனை வரவேற்புக்கொடுத்து ஏற்றுக்கொள்ளுகிறது திருச்சபை. வாழ்நாள் எல்லாம் கள்வர்கூட்டத்தில் கழித்து, இன்று சொந்தக்கள்வரால் உடலில் கத்திஇறுக்கப்பட்டு ஒருவன் துடித்துக்கொண்டிருக்கும்போது இவன் கத்தோலிக்கன் என்று சொல்லிக்கொண்டு அவன் அருகில் நின்றுகொண்டிருக்கிறார் மற்றொரு குரு. சாவுகூடங்களைத் தேடிக்கொண்டு தூக்குமரத்திற்கும், நரகத்தின் வாயிலுக்கும் நுழையும்நபர்களைப்பற்றி இழுப்பதிலேயே காதல் கொள்கிறது பரிசுத்த திருச்சபை.

யேசுநாதர் தம் விரோதிகளையே தேடிச்செல்வது விந்தையாக இருக்கிறது. பரிசுத்தரானவர் பாவிகளோடு அலைகிறார். நோயாளிக்கே வைத்தியன் தேவைப்படுகிறான். சுகமுற்றவனுக்கல்ல. பரிசுத்தனுக்கும், பாவிக்கும் மாறுபாடு; பாவமும், பரிசுத்தமும் ஒன்றைஒன்று எதிர்க்கிறது. ஆனால், பரிசுத்தரானவர் பாவியை அரவணைக்கிறார். பாவியின்பால் அவருக்குள்ள வேட்கையைக் காட்டுவதற்காக ஊதாரியின் உவமையைப் பகர்ந்தார். நல்வழியில்நின்று தவறிப்போன இம்மகன் எப்படிப்பட்ட இழிநிலைக்கு வந்தானென்றால், பன்றிகளோடு போட்டியிட்டு வயிறு நிறைக்கின்றான். இந்தநிலைக்கு வந்தாலும் அவன் பயன்அற்றவன் ஆகிவிடவில்லை. என்று தன்கேட்டை உணர்ந்து பிதாவிடம் திரும்பிவந்தானே, அன்றே முற்றிலும் வேறுமனிதன் ஆகிவிட்டான். நேர்மையாக நடந்த தன்மகனைவிட மேலாக நடத்தப்படுகிறான். இதுபோன்றே மனந்திரும்பிய பாவிக்கு வந்தவாழ்வும். "தொண்ணூற்றென்பது நல்லவர்களால் உண்டாகும மகிழ்ச்சியைவிட மனந்திரும்பிய ஒரு பாவியின்நிமித்தம் மோட்சத்தில் அதிகஆனந்தம் உண்டாகும்" என்றுசொல்லுகிறார் யேசு. ஆனால், "தயங்காமல் பாவஞ்செய். பாவமோ புண்ணியமோ எல்லாம் ஒன்றுதான். கலப்பற்ற இன்பம் கிடைக்கின்றது. தொடர்ந்து செய்" என்று ஊக்கமளிக்கும் இலக்கியங்களுக்குக் குறைவில்லை. கணக்கற்ற ஊதாரிகள் இந்தஅழைப்பிற்குச் செவிமடுக்கிறார்கள்.



யேசுநாதர் பாவத்தைஅழிக்க வந்தேன்என்று சொல்லுகிறார். மக்கள் பாவவழியை விட்டொழிக்க வேண்டும்என்று தன்னால் இயன்றதைஎல்லாம் செய்கின்றார். பாவத்தின் பலாபலனை எடுத்து விபரித்து, அது எண்ணமுடியாத தண்டனையைச் சம்பாதித்துக் கொடுக்கும்என்று எச்சரிக்கிறார். இருந்தும் வாழ்நாளெல்லாம் பாவச்சேற்றிற் புரண்டு, கற்பென்னும் அரும்புண்ணியத்தைக் காற்றில் பறக்கவிட்டு, ஊரெல்லாம் விபசாரிஎன்று பெயர்எடுத்தபாவி மதலேனளை நேசிக்கிறார். பொதுமக்களால் இழிமகளென்று ஒதுக்கப்பட்டு, பரிசுத்தரான கடவுளுக்கு நேர் எதிரான பாவங்களைச் செய்துவிட்டு மன்னிப்புக்கேட்ட மதலேனள் மறுகணமே கடவுள் குமாரனின் தனி அன்புக்குப் பாத்திரமானள். மரியாள் நகரத்தின் ஆடவர்களைத் தன் ஒப்பற்ற அழகினால் கவர்ந்துகொண்ட வனிதை. வாழ்வின் நேர்மை தவறினள். உடலின் இச்சைக்கும், உள்ளத்தின் வேட்கைக்கும் அடிமையான துர்ப்பாக்கியவதி. அழிவுப்பாதையில் விரைந்துகொண்டிருந்தாள். பாவிகளைத் தேடித்திரியும் ஆயன் யேசு போதனைக்குரல் அவளின் உள்ளத்தைத் தொட்டது. தன்கேவல நிலையைத் தன்மனத்திரையிற் கண்டாள். பச்சாத்தாபம் என்ற சூளையில் வாழ்நாளின் பாவமெல்லாம் குவித்து வைத்து உலை ஏற்றினள். பாவிகளைத் தேடிவந்த அண்ணலின் சமுகத்தை நோக்கிவிரைந்தாள். அவர் சிந்தனையில், பாவக்குழியில் புரண்டுகிடக்கும் பலகோடிமக்களுக்குப் பேரின்பம் கொடுக்க வேண்டுமென்று துடிதுடித்துக் கொண்டிருக்கும் அன்பு ஓடிக்கொண்டிருந்தது. அவளுக்கு ஆறுதல்மொழிகூறி மன்னிப்பின் முத்தம் கொடுக்கிறார். "பெண்ணே! நீ சமாதானமாய்ப் போ."

விபசாரத்திற் பிடிபட்ட அபாக்கியவதி அமைந்தமனதோடு நிற்கின்றாள். நஞ்சை நெஞ்சில்கொண்ட நயவஞ்சகர், கருணைவள்ளலைச் சூழ்ச்சிசெய்ய அவரிடம் தீர்ப்புக் கேட்டார்கள். அவர் ஞானத்தில் பழுத்த தீங்கனியொன்றை அவர்கள் சிந்தனைக்கு விட்டுவிட்டு நிதானமாகச் சிறு குழந்தையைப்போல் மண்ணில் விளையாடிக்கொண்டிருந்தார். தலையை உயர்த்தியபோது பரிசுத்தரும் பாவியும் மாத்திரம் அங்கு நிற்கிறார்கள். வேறு யாரும் அங்கில்லை. இவர் கருணையின் அவதாரம். அன்பு ததும்ப 'அம்மா நீ போ; இனிப் பாவம் செய்யாதே' என்று மொழிந்தார்.

பாதகத்தின் படுபாதாளம். சொந்தக் குருநாதரை முப்பதுவெள்ளி நாணயத்திற்கு விலைபேசிப் பகைவர் கையில் பிடித்துக் கொடுத்த மாபாவம். முக்காலத்தையும் ஒரே பார்வையில் அறியும் கடவுள் இந்தக் கொடியவனைத் தன் வல்லமையினால் அழித்து ஒழித்திருக்கலாமே. ஆனால், பரிசுத்தர் நடந்துகொள்ளும்விதம் ஆச்சரியமானது. நெறிமாறிக் கோணல்வாழ்விலே கால் எடுத்து வைக்கிறான் என்று வருத்தமுற்ற அன்புத்தெய்வம், எச்சரிக்கை செய்தார். கடைசி இராப்போசனத்தின்போது, கொடியவனின் துர்ப்பாக்கியத்தை மாற்றும் பொருட்டு உள்ளத்தின் வேதனையை வெளிப்படுத்தினர். நேரடியாகவும் எச்சரித்தார். கருணைக்குப் புறமுதுகு காட்டினன். ஜெத்சமனி தோட்டத்தில் அவனின் ஆத்மாவின் அடியிலே புதைந்திருந்த சோதனைத் தீ அருள் ஜோதியின் திருவதனத்தில் முத்தமாய்ப் பொறிந்தது.



அன்புத்தெய்வம் அந்தநேரத்திலும் இந்த அவல உருவத்தைக் கடிந்து நோக்கினரில்லை. கடும்சொல் மொழிந்தார் இல்லை. அங்கே அன்பிற்கும் கருணைக்கும்தான் இடம் இருந்தது. "நண்பா! மனுமகனை முத்தமிட்டா காட்டிக்கொடுக்கிறாய்" என்று முறையிட்டார்.

உடலும், உயிரும்போல யேசுவோடு ஒன்றித்து வாழ்ந்த இராயப்பர்; நடுக்கடலிலும் அன்புவேட்கையால், ஆழ்கடலில் குதித்த இராயப்பர்; மற்ற எல்லோரும் விட்டுப் பிரிந்தாலும் நான் உம்மைப் பிரியேனென்று சபதம்செய்தவர்; சேவகனின் செவிகளைச் செதுக்கித் தன் தலைவருக்குச் சாட்சி சொல்லத் துணிந்து நின்ற அப்போஸ்தலர், கைப்பாசின் முற்றத்திலே கை தளர்ந்துவிட்டார். யாரை இதய கமலத்தில் வைத்து அஞ்சலிசெய்தாரோ, யாரோடு வாழ்வதே இன்பம் என்று இறுமாந்திருந்தாரோ, யாரை ஆண்டவரின் குமாரன் என்று பிரகடனம் செய்தாரோ அவரை, கொடுமை கைப்பற்றி ஆட்டியபோது, வஞ்சம் வாட்டி வதைத்தபோது, தப்பித்துக்கொள்வதற்காக "அறியேன்" என்று மூன்றுமுறை அறைந்து கூறிவிட்டார். இவ்வளவு பெரியதுரோகம் செய்தபின்னும் அவரின் கடைக்கண் நோக்கின் கருணை அம்பு, இராயப்பரின் உள்ளத்தில் பாய்ந்து பச்சாத்தாபத்தீயை மூட்டியது. மனதிற்கு உறுதியளித்து, மாதாவின் விரிந்த கரங்களை ஓடிஅடையச் செய்தது.

தந்தையின் வீட்டைவிட்டுப் பிரிந்த ஊதாரி வீடு திரும்பவேண்டும். இதுவே தந்தையின் ஏகஆவல். அவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால், சுதந்திரமாக வாழவேண்டுமென்று உலகசூழலில் குதித்தவன் பார்வையைத் திருப்பவேயில்லை. உலக நாட்டங்களில் தன்னைப் பறிகொடுத்தான். பாவச்செயல்களில் ஈடுபட்டு ஆன்மாவைக் கறைப்படுத்தினன். எனவே, இன்று பிதாவின்வீடு போய்ச்சேரவேண்டுமானல் முதலில் தன்னுடைய நிலையை உணரவேண்டும். வாழ்க்

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

## அன்பே! எம் ஆருயிரே!

அன்பே! எம் ஆருயிரே! அருளின் தேவா!
அவனிதனை மீட்கவந்த அமலநாதா!
என்புருக அடிபட்டு இரத்தம்பீற
இருவிழிகள் செருக உடல் பதைத்துவாட
வன்கண்ணர் இரக்கமின்றி வருத்த மாதா
வருந்திஅழ, வலுவிழந்து வாதைமீற
துன்பமெலாம் சூழ உயிர் துடிதுடிக்கத்
துஷ்டர்செய்த கொடுமைஏற்றீர் தூயதேவா!

திருவதனம் ஒளியிழக்கத் தெம்புகுன்றத்
தீயரிட்ட முடி முள்ளு வாதைசெய்ய,
கருகிடவே திருமேனி, கரமும் காலும்
கடுகடுக்க இருப்பாணி தன்னில் தொங்கி
பருகிடவே கொடியர்தந்த பிச்சுக்காடி
பரிவுடனே நீர்ஏற்றீர் பாவம் தீர்த்தீர்
ஒருபிழையும் அறியாத தேவதேவா!
உம்மை முழுதும் எமக்களித்தீர் உயிரைஈந்தீர்.

வசை ஏற்றீர் தீயர்சொன்ன வம்புஏற்றீர்!
வாய்திறந்து பேசாது பொறுமை கொண்டீர்!
தசைபிரிய அடித்திடவும் தவித்துவீழத்
தள்ளி உம்மைக் கொடுமைசெய்யப் பொறுத்து, தேவ
இசை விதென்று நீர் நினைந்தீர்! மீட்பின் தேவா!
இன்முகத்தோடே சுமந்தீர் சிலுவை தேகம்
அசைவுகொண்டு துயர்மேவ அதன்கீழ் வீழ்ந்தீர்!
ஆகடியம் எல்லாம் பொறுத்தீர் அவனிமீட்டீர்!

ஆசிரியர்: ச. அமிர்தநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தின்சரி பூசை வழிகாட்டி

### பங்குனி மாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 22 | ஞா. | குருத்தோலை ஞாயிறு பரிசுத்த வாரம் | [ஊ] |
| 23 | தி. | பெரிய திங்கள் | [ஊ] |
| 24 | செ. | பெரிய செவ்வாய் | [ஊ] |
| 25 | பு. | பெரிய புதன் | [ஊ] |
| 26 | வி. | பெரிய வியாழன் | [ஊ] |
| 27 | வெ. | பெரிய வெள்ளி | [க] |
| 28 | ச. | சனி | [வெ] |
| 29 | ஞா. | கர்த்தர் உத்தான பாஸ்கா ஞாயிறு | [வெ] |
| 30 | தி. | காலதினம் | [வெ] |
| 31 | செ. | காலதினம் | [வெ] |

### சித்திரை மாதம்

| | | | |
|---|---|---|---|
| 1 | பு. | காலதினம் | [வெ] |
| 2 | வி. | காலதினம் | [வெ] |
| 3 | வெ. | காலதினம் | [வெ] |
| 4 | ச. | காலதினம் | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு பங்குனி மாதம் 21-ந் திகதி


## குருத்தோலைக்குப் பின்னல்

குருத்து ஞாயிறு வருகிறது. ஓசன்னா வாழ்த்தொலியும் நம் செவிகளில் கேட்கின்றது.

ஆரவாரம் செய்தனர் யூதமக்கள். ஒலிவங் கொப்புகளை அசைத்து ஆர்ப்பரித்தனர்.

தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா, யூதர்களின் தலைவனுக்கு ஓசன்னா என மகிழ்வொலி எழுப்பினர்.

ஆர்ப்பரிப்புகளின் ஒலி ஆசாரியர்களின் காதில் விழுந்தது. ஆத்திரம் தலைதூக்கியது.

இந்தப் புரட்சியாளனை அவர்கள் விரும்பவில்லை. ஒழித்துக் கட்டத் திட்டம் வகுத்தனர்.

அந்தத் திட்டத்தை அமுல் நடத்த யூதர்களையே அவருக்கெதிராக உபயோகித்தனர்.

வெள்ளாடுகள் ஓநாய்களாக மாறின. தெரியப்பட்டவர்களே தங்கள் தேவனுக்கெதிரா யெழுந்தனர்.

தேவகுமாரன் யாரை இரட்சிக்க உலகுக்கு வந்தாரோ, அவர்களே அவரைக் கொலைக் குற்றவாளியாக்கினர்.

ஆம். அவர் செய்த நன்மைகளை மறந்தனர் அம்மாபாவிகள். அவரை மறுதலித்தனர். காட்டிக் கொடுத்தனர்.

அன்றிருந்து இன்றுவரை மனுக்குலத்தோரால் அதே கைங்கிரியம் நடாத்தப்படுகிறது.

ஆண்டுக்கு ஒருமுறை மகிழ்ச்சி மிக்க குருத்தோலை. அடுத்து வரும் கர்த்தரின் பாடுகட்கு முன்னோடித்தினம் அது.

மனுக்குலத்தோரின், இரட்சணியத்துக்காக மனுமகன்பட்ட வேதனைகளை நினைவுறுத்துகின்றன பரிசுத்தவாரச் சடங்குகள்.

காட்டிக்கொடுத்த யூதாசின் பேராசை. மறுதலித்த இராயப்பரின் கோழைத்தனம். இவற்றையெண்ணி இதயம் நொந்தார் எங்களாண்டவர் அன்று.

இன்றோ? அவரை எத்தனைதரம் மறுதலித்து விட்டோம்? அவர் மேல் நாம் எறிந்த கற்கள்தான் எத்தனை?

இந்தக் குருத்தோலை ஞாயிறன்று. மீண்டும் அவரை ஆடம்பரமாக வரவேற்கப் போகிறோம்.

இந்த வரவேற்பும், ஆர்ப்பரிப்பும் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்?

இந்த நிலை மாறவேண்டும். நாமே ஏற்றுக் கொண்டவரை உதறித்தள்ளுதல் நமக்கு நல்லதல்ல.

அடுத்த குருத்தோலையில் அவரை ஏற்றுக்கொள்வோம். பரிசுத்த வாரத்திலே எங்கள் நிலையை நாமே நன்கு ஆராய்வோம்.

இனிமேல் எங்களாண்டவரை வதைப்பதில்லை, மறுதலிப்பதில்லையென உறுதி செய்வோம்.

வியாகுலத்தாயின் துணையுடன் அவ்வுறுதியை எந்நாளும் காப்போம்.

அப்போது மகிழ்ச்சியின் உத்தானம் எமக்கு உரியதாகும்.

# "தாகமாய் இருக்கிறேன்"

— பாக்கியம் —

கிறிஸ்துநாதர், உலகஇரட்சகர், ஆயிரமாயிரம் ஆண்டுகள் தாய், தந்தையரால் எதிர்பார்க்கப்பட்டிருந்த நம் "மெசியாஸ்" இப்பொழுது, இப்பயங்கரமான சிலுவையில் அறையுண்டிருக்கும்பொழுது, **தாகமாயிருக்கின்றார்.** ஆம் தண்ணீர்த் தாகமாயிருக்கின்றார். பாஸ்காவின்பொழுது அவர் அருந்திய அந்த முந்திரிப்பழ இரசத்தைவிடச் சிலுவையில் மரிக்கும்வரை அவர் தண்ணீர் அருந்தவில்லை; அதனாற் தாகமாயிருக்கின்றார். ஆனால் அவரின் தாகம் தண்ணீர்த் தாகம் மாத்திரமல்ல, அவரின் தாகம் மனிததாகம். ஏனெனில், மனிதனுக்காகவே இக்கொடிய சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறார். ஆனால் அவரின் தாகம் மனிததாகம் மட்டுமல்ல, ஆனால் ஆத்துமதாகம். மனித ஆத்துமத்தை ஈடேற்ற அவர்கொண்ட பெரும் தாகம், கங்குகரையற்ற தாகம், எல்லையில்லாத்தாகம். மனிதனின் தாகமல்ல, கடவுளின் தாகம், இரண்டாம்ஆளாகிய கடவுளின் தாகம். ஏனெனில், இப்பரிசுத்த சிலுவையில் தொங்கிக்கொண்டிருப்பது ஒரு மனிதன் மட்டுமன்று, ஆனால் ஓர் உண்மையான உயிருள்ள கடவுள்.

யேசுநாதரின் ஆத்துமத்திலுள்ள அளவிடற்கரிய இத்தாகம், சிலுவையில் அவர் தொங்கும்போது, அவரின் வார்த்தைகள்மூலம் வெளிப்படுகின்றது. **"தாகமாயிருக்கிறேன்"** (அரு. 19—28). உண்மையில் கடவுளும், மனிதனுமாயிருக்கும் திவ்விய யேசு **"தாகமாயிருக்கிறேன்"** என்று அலறுகிறார். தாகம் என்றால் என்ன என்பதை அவர் உண்மையில் அறிந்திருந்தார். அவ்வாக்கியத்தைவிட வேறொரு வாக்கியத்தையும் அவர் தெரிந்துகொள்ளவில்லை. நமக்கும் தம் ஆத்தும அவாவை வெளிப்படுத்துவதற்கு அவர் தெரிந்துகொண்ட வாக்கியம்: **"தாகமாயிருக்கிறேன்."**

இத்தாகம் அவரிடம் எப்பொழுதுமே இருந்துவந்தது. இத்தாகத்தின்பொருட்டே உலகத்திற்கு வருகின்றார் நம் யேசு. ஒரு மனிதனாகவும் உருவெடுக்கின்றார். இத்தாகம் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றில் தெள்ளிதிற் புலனாகின்றது. தம் தாயார் தேவமாதாவுடனும், தம் கைத்தாதையாம் அர்ச். சூசையப்பருடனும் ஜெருசலேம் தேவாயலம் செல்கின்றார் நம் பன்னிருவயது யேசு. பெற்றோர் இருவரும் அறியாமற் தேவாலயத்திற் தங்கி, வேதபாரகருடன் தர்க்கித்துக்கொண்டிருக்கிறார். மூன்று நாள் அவரைத் தேடியலைந்து மூன்றாம் நாள் தேவாலயத்தில் அவரைக் காண்கின்றனர் தேவதாயாரும், சூசையப்பரும். அப்பொழுது தேவதாய்: "மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தீர்? இதோ, உம்முடைய தந்தையும் நானும் துக்கித்து, உம்மைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர் (யேசுநாதர்) "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் பிதாவின் காரியங்களில் அலுவலாயிருக்க வேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதோ" என்றார் (லூக். 2 : 48—49).

ஆம், கிறிஸ்துநாதர் பிதாவின் காரியங்களில் அலுவலாயிருக்கிறார். பிதாவின் காரியங்கள்: பாவத்தில் விழுந்து, அதில் விலங்குகளைப்போல் புரளும் மனிதனை மீட்டிரட்சிப்பதே. கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதனை, பாவமென்னும் கொடிய நஞ்சாய் கடவுளிடமிருந்து பிரிக்கப்பட்ட மனிதனை, அவனின் பகைவனும் பசாசினிடமிருந்து விடுவிப்பதே அவரின் விருப்பம். இதுவே கிறிஸ்துநாதரின் முக்கியவேலை, ஒரே வேலை. இதுவே அவரின் தாகம். இத்தாகம் அவரிடம் கொழுந்துவிட்டெரிகின்றது. இத்தாகத்தின்பொருட்டு. விண்ணை விட்டுவிட்டு மண்ணிற்கு வருகின்றார். சுகத்தைத்துறந்துவிட்டுத் துக்கத்தை ஏற்கின்றார்; தம் ஏக பிதாவைவிட்டுப் பிரிந்து, இம்மண்ணுலகில் ஒரு கைத்தாதையை ஏற்றுக்கொள்கிறார்; கோடானுகோடி சம்மனசுக்களை விட்டுவிட்டு, ஆயிரமாயிரம் மனிதர்களைத் தேடி வருகின்றார்; மகிமையை விட்டுவிட்டுப் பாடுகளை அனுபவிக்கின்றார். சிலுவையிலும் தொங்கிக்கொண்டிருக்கின்றார்.

பாடுபடுவதற்குமுன் யேசுநாதர் தேவநற்கருணையை ஏற்படுத்திய பொழுது, தமது தாகத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றார். "நான் பாடுபடுவதற்குமுன்னே இந்தப் பாஸ்காவை உங்களோடுகூட உண்ணும்படி ஆசையோடு ஆசையாயிருந்தேன்" (லூக். 22 : 15). ஆம் அவர் ஆசையாயிருக்கிறார். ஏன்? தம்மை நமக்குக் கொடுப்பதற்காக; தாம் நமது ஆத்துமங்களில் வந்து வசிப்பதற்காக; அதைத் தம்முடைய உறைவிடமாக்கிக் கொள்வதற்காக. ஆம் இந்தஆசை, இந்த அவா, இவ்வாஞ்சை அவரிடம் எப்பொழுதும் பற்றி எரிந்துகொண்டிருந்தது. அதுவுமல்லாமல் தாம் பாடுபடுவதற்குமுன்பே, அவர் தம்மையே நமக்குத் தருகின்றார். இப்பாடுகளைப்பட அவர் எப்பொழுதும் சித்தமாயிருந்தார். இப்பாடுகளையே அவர் எப்பொழுதும் நினைத்திருப்பார். ஏனெனில், இப்பாடுகளின் மூலமாகவே அவர்மனுக்குலத்தை நரகத்தில்நின்று மீட்டுப் பரகதி சேர்ப்பார்; இப்பாடுகளின் மூலமாகவே அவர் மனுக்குலத்தை ஈடேற்றுவார்; இப்பாடுகளின் மூலமாகவே அவர் கடவுளையும் மனிதனையும் நண்பர்களாக்குவார், அன்பர்களாக்குவார்.

கடைசியாக, கள்வர்களில் கள்வராய், கல்வாரிமலை உச்சியில் சிலுவையில் அறையப்பட்டிருக்கும்பொழுது, அவர் தமது தாகத்தை வெளிப்படுத்துகிறார். **"தாகமாயிருக்கிறேன்"** என்று புலம்புகிறார். ஆம் அவர் தாகமாயிருக்கிறார். தாகத்தின் காரணம் அன்றைய கொடியசூரிய வெப்பம்மாத்திரமல்ல; ஆனால் ஆத்துமங்களுந்தான். இவ்வாத்தும தாகம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்புமட்டும் யேசுநாதரிடம் இருக்கவில்லை. ஆனால், அன்றேபோல், ஏன் அதைவிட மிகவும் அதிகமாக, இன்றும் அவரிடம் இருக்கின்றது. அன்றைக்கு ஓர் இலட்சம் ஆத்துமங்களுக்காகத் தாகமாயிருந்தாரென்றால் இன்றைக்கு ஆயியிம் ஆயிரம் இலட்சம் ஆத்துமங்களுக்காகத் தாகமாயிருக்கிறார். ஏனெனில்; அவர் எல்லா மனிதர்களுக்காகவும் பாடுபடுகிறார். ஆனால் எல்லா மனிதர்களும் மோட்சம் சேராமல், கடவுளை அடையாமல் நரகக் குழியிற் புதைக்கப்படுவதைக் கண்டு அவரின் தாகம் அதிகமாகிறது. இன்றைய இருபதாம் நூற்றாண்டில் கடவுளும் இல்லை, தெய்வமும் இல்லை என்று கங்கணம் கட்டுவோர், தம்மால் இவ்வுலகில் எல்லாம் செய்யமுடியுமென்று மனக்கோட்டை கட்டுகின்றனர். இவர்களின் கதி என்ன? இவ்வுலகத்துக்காக மாத்திரமா இவர்கள் படைக்கப்பட்டனர்? இவர்களின் ஆத்துமம் எங்கேபோகும்? என்ன நிலை அடையும்?

ஏன் கடவுளை நம்புவோரும், அவரின்மேல் விசுவாசம் கொண்டுள்ளோரனைவரும், கடவுளின் கட்டளையின்படி நடக்கின்றனரா? அன்றேல் பாவத்தில்விழுந்து, பரமனைமறந்து, அவரின் எதிரிகளாகின்றனரா? உலக இரட்சகர், சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் நம் அன்பர், இவ்வுலகில் நடப்பன யாவற்றையும் பட்டப்பகலைப்

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின்
ஆசனக்கோவிலில் நிறைவேற்றப்படும்

## பரிசுத்தவாரத் திருச்சடங்குகள்.

**1964 பங்குனி 22-ம் திகதி குருத்தோலை ஞாயிறு**

காலை 7-25 மணிக்குக் குருத்தோலைப் பவனியும், மேற்றிராணி ஆண்டவரின் பூசையும்.

**26-3-64 பெரிய வியாழக்கிழமை**

காலை 6-15 மணிக்கு மேற்றிராணி ஆண்டவரின் பரிசுத்த தைலங்கள் ஆசீர்வதிக்கும் பூசை.

மாலை 6 மணிக்கு மேற்றிராணி ஆண்டவரின் இராப் போசன ஞாபகப் பாடற்பூசை.

**மாலை 11 மணிக்குத் திருமணித்தியாலம்**

**27-3-64 பெரிய வெள்ளிக்கிழமை**

பிற்பகல் 4 மணிக்கு ஆண்டவருடைய திருப்பாடுகளினதும், மரணத்தினதும் திருச்சடங்குகள் மேற்றிராணி ஆண்டவரால் நிறைவேற்றப்படும்.

**மாலை 5-30 மணிக்குச் சிலுவைப் பாதையும், சிலுவை முத்திசெய்தலும்.**

**28-3-64 பெரிய சனிக்கிழமை**

மாலை 10-45 மணிக்குப் பாஸ்கா விழிப்புத் திருச்சடங்குகளும், மேற்றிராணி ஆண்டவரின் பெரிய பாடற்பூசையும்.

**கட்டளைக்குரவர்**



## [கண்ணீர் சிந்துவதேனம்மா?

### தேவதாயின் 6-ம், 7-ம் வியாகுலங்கள்

(1) போதகன் யேசு சிலுவைமீதே
பாதகர் எமக்காய் மரித்தபின்னும்
வேதனையுடனே அருகில் நின்றே
மாதா நீர் உளம் வாடுகையில்
விரைவாய் வந்த சேவகரின்
கரத்தே இருந்த ஆயுதத்தைக்
கண்டதும் "இன்னமும் என்மகனை
என்னதான்செய்வரோ"என ஏங்கிக்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(2) முன்னே வந்த செந்தூரியன் தன்
மின்னெனப் பளீரிடும் ஈட்டியினுல்
புண்பட்ட மைந்தனின் விலாப்புறத்தை
வன்மையாய்க் குத்தித் திறந்துவிடச்
சுருக்கெனப் பாய்ந்துமே ஓடிவந்த
இரத்தமும் தண்ணீரும் சிந்திடவே
வீரும் வேதனை உற்றதனுல்
ஆரும் ஆகுல வாளுடுருவக்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(3) கடைசித் துளியாம் குருதியையும்
கருதி எமக்காய்ச் சிந்திவிட்ட
மைந்தன் செய்த தியாகத்தின்
மிஞ்சிய பலனை அடையாது
இன்னும் பாவச் சேற்றினிலே
என்றும் உழலும் பாவிகள் நாம்
உந்தன் தாளில் இறைஞ்சுகின்றோம்!
விஞ்சும் பிழைகள் பொறுத்திடுவீர்!
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(4) வல்ல இறைவனின் சித்தமதாய்
எல்லாம் நடந்தே முடிந்தபின்னே
நல்ல தேவனின் சடலமதை
நல்லோர் உந்தன் மடிமீதே
நீண்டு கிடக்கக் கிடத்திவிட
யாண்டும் செறிந்த காயங்களை
ஏக்கத்துடனே தடவித்தடவி
ஏழாம் வாளுடுருவ நீரும்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(5) கர்த்தன் யேசுவின் சடலத்தைக்
கண்டே கண்ணீர் வடித்தபின்னர்
நற்சீஷன் காட்டிய கல்லறையில்
நவமாய் அடக்கஞ் செய்துவிட்டே
மதுர யேசுவைப் பிரிந்ததனுல்
மனமும் நைந்தே கலங்கிடவே
தனிமை என்ற வேதனையில்
தவித்துத் துடித்துத் தாயே! நீரும்
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(6) இத்தரை மீதிலெம் இரட்சகியான
கர்த்தனின் மேலாம் அன்னையுந்தன்
இத்தனை கண்ணீர்க் கிலக்காகும்
உத்தமப் பேற்றை அடைந்திட்ட
நற்றவம் செய்த மக்களெமை
வித்தைகள் மிகுந்த நரக அலகை
கவ்வியே இழுத்திட விடலாமோ?
கரை சேர்த்துக் காப்பதுந்தன் பொறுப்பே!
கண்ணீர் சிந்துவதேனம்மா!

**செல்வி ரேஜா சாமுவேல்**

# பேசும் பேனு

### சிந்தனைக்காலம்

தபசுகாலத்தின் மிகமுக்கியமான பகுதி நெருங்கிக்கொண்டிருக்கிறது. எமதுசிந்தனையைமற்றும்அலுவல்களில் இருந்தும் குறைத்துக்கொண்டு கிறிஸ்துவையும் அவரது இரட்சணியப் பலியையும்பற்றித் தியானிக்கவேண்டியது நம்கடமை. திருப்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட சிலகருமங்களைப் பேசும் பேனுவும் நேயர்கட்களிக்க முன்வந்துளது.

### பங்குனி பதினைந்து

புனிதர் லோங்கினுஸ் அவர்களின் திருநாள் பங்குனி பதினைந்தாம்தேதி. இப்புனிதர் கிறிஸ்துவின் பாடுகளுடன் சம்பந்தப்பட்டவர். சிலுவையிலறையப்பட்டோரின் உயிர் பிரியாதிருப்பின் அவர்கள் தப்பியோடாதிருக்கும்படி கணுக்கால்களை முறிப்பது வழக்கம். சேவகர்கள் இருகள்வரினதும் கால்களை முறித்தபின் யேசுநாதரிடம் வந்தனர். அவர் ஏற்கனவே மரித்திருந்தமையால் அவரது கால்களை முறிக்க எவரும் முன்வரவில்லை.

### விலாவிலே குத்தினுன்

ஆயினும் ஒரு செந்தூரியன் தனது ஈட்டியினுல் யேசுவின் விலாவிலே குத்தினுன். அப்போது இரத்தமும் தண்ணீரும் அக்காயத்திலிருந்து சொரிந்தன. இச்சம்பவத்தைக்கண்டு கிறிஸ்து தேவகுமாரனென அச்செந்தூரியன் அறிக்கையிட்டானென்று சுவிசேஷகர்கள் நமக்கு எடுத்தோதுகின்றனர். இச்செந்தூரியனே நாம் மேலே குறிப்பிட்ட புனிதர். இந்நிகழ்ச்சியுடன் அவர் கிறிஸ்துவை விசுவசிப்பவர் ஆனுர்.

### கண்கள் திறந்தன

இந்தச்செந்தூரியர் ஒருகண் குருடானவர். விலாவைக்குத்தியபோது பாய்ந்த இரத்தமும் தண்ணீரும் அவரது குருட்டுக்கண்ணிலே தெறித்தன என்றும், உடனடியாக அவர் பார்வை பெற்ருரென்றும் சொல்லப்படுகிறது. "புனிதர்களும் அவர்களது செயல்களும்" என்ற பிரசித்திபெற்ற எழுத்தாளர் செலன் ரேடரின் நூலில் இப்புனிதர் பற்றிய சில வரலாறுகளும் காணப்படுகின்றன.

### வேதசாட்சி ஆனுர்

ஜெருசலேமில் முகாமிட்டிருந்த ரோமைய சேனையின் செந்தூரியர்களுள் ஒருவரே புனித லோங்கினுஸ். பின்னர் இவர் பலஸ்தீனுவின் செசாரியா பட்டினத்துக்கோ அல்லது வட இத்தாலியிலுள்ள மாந்துவா பட்டினத்துக்கோ தம் சேனையுடன் மாற்றம் பெற்றுச் சென்ருர் எனத் தெரிய வருகிறது. இவ்விதம்சென்ற இடத்தில் பகிரங்கமாகத் தமது கிறிஸ்தவ விசுவாசத்தைத் தெரியப்படுத்தியபடியால் வேதசாட்சி முடிபெற்ருர்.

### ஈட்டிமுனை

கிறிஸ்துநாதரின் புனித உடலைத் துளைக்கும் பாக்கியம்பெற்ற அவ் ஈட்டியைப்பற்றியும் ருசிகரமான வரலாறு உண்டு. வெகுகாலமாக இப்புனித சின்னம் வீயன்னுவில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வந்தது. காத்திராப் பிரகாரமாக ஈட்டியின்முனை உடைந்து தண்டிலிருந்து கழன்றுவிட அக்கூரிய முனையைப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தனர். இப்புனித சின்னத்தைத் தம்முடன் வைத்திருக்கும் அரசர்கள் அல்லது தலைவர்கள் செல்வாக்கும் பெலமும் பெறுவர் என்றதொரு ஐதீகமும் அக்காலத்தில் நாடுகளின தலைவர்களிடையே பரவியிருந்தது.

### கிட்லரும் ஈட்டிமுனையும்

இரண்டாவது உலகயுத்த காரணரானஜேர்மனிய சர்வதிகாரிகிட்லருக்கு மதநம்பிக்கை மிகமிகக்குறைவாயிருந்தபோதிலும் மேற்கூறிய ஐதீகத்தில் அவருக்குச் சிறிது விசுவாசமிருந்தது என ஒரு ஜேர்மனிய பத்திரிகை தெரிவிக்கிறது. அப்பத்திரிகைத் தகவலின்படி கிட்லர் அவுஸ்திரியாவைக் கைப்பற்றியதும் முதற் கருமமாக வீயன்னுவில் பாதுகாக்கப்பட்ட ஈட்டி முனையை உடனடியாக ஜேர்மனியின் தலைநகரான பேர்லினுக்குக் கொண்டு போகும்படி கட்டளையிட்டாராம்.

## நமது அச்சகம்

பரிசுத்த வாரத்தையிட்டு பங்குனி மாதம் 25-ந்தேதி புதன்கிழமை மத்தியானந் தொடக்கம் 30-ந்தேதி திங்கட்கிழமை முடிகிறவரையிலே நமது அச்சகம் மூடப்பட்டிருக்கும். 31-ந்தேதி செவ்வாய்க்கிழமையே மறுபடி வேலை ஆரம்பமாகும்.

## பாராட்டுகின்றோம்

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரியில் அக்கல்லூரி மாணவர்களால் சென்ற 16-ம், 17-ம்திகதிகளில் திருப்பாடுகளின் காட்சியானது மிகவும் கலைநுட்பத்துடனும், பக்தியருட்சியுடனும் வெகுசிறப்பாய் நடித்துக்காட்டப் பட்டது.

காட்சியை நெடுந்தீவு, முல்லைத்தீவு, மன்னுர் முதலாம் பிறஇடங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்காஞேர் திரளாக வந்து கண்டுகளித்தனர்.

குறுகிய காலஎல்லையுள் இதனை இத்துணைச்சிறப்பாகத் திறம்பட நிர்வகித்த நிர்வாகஸ்தருக்கும், நடித்த மாணவர்களுக்கும் எமது பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளுகின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச வேளை

**நமது நிருபர் அமலன்**

(முன்தொடர்ச்சி)

அம்மா : யேசுநாதருடைய பாடுகள் சம்பந்தப்பட்ட வேறு பொருட்களும் இப்போது பாதுகாக்கப்படுகின்றனவா ?

பெரியண்ணு : யேசுவைக் கட்டியடித்த கற்றூணைப்பற்றியும் சில தகவல்கள் உண்டு. இந்தக் கற்றூணில் ஒருபகுதியை ரோமையிலும் மறுபகுதியைப் பலஸ்தீனுவிலும் வைத்திருக்கிறார்கள்.

இயூஜின் : ரோமையிலுள்ள பகுதியை நான் ரோமைக்குச் சென்றிருந்த சமயம் பார்த்திருக்கின்றேன். புனித பிறெக்டியஸ் ஆலயத்தில் அதைப் பாதுகாக்கின்றார்கள். பலஸ்தீனுவிலிருந்து கர்தினுல் யோண் கொலன்ஞுஆண்டகை அதைரோமைக்குக் கொண்டுவந்தார். எங்கள் நாட்டிலுள்ள பழையகருங்கற் தூண்களைப் போல இது காட்சியளிக்கின்றது.

பெரியண்ணு : ஜெருசலேமில் கல்லறைக் கோவிலில் மறுபாதிக் கற்றூண் உண்டு. ஐந்தாவது நூற்றாண்டில் புனிதர் ஜெரோம் தாம் இப்புனித தூணைச் சந்தித்ததுபற்றி எழுதியுள்ளார். கிறிஸ்துவின் இரத்தக்கறைகள் சில அத்தூணில் காணப்பட்டதாக அவரது அறிக்கைகள் கூறுகின்றன.

கார்மெலா : கிறிஸ்துநாதரின்மேல் சூட்டிய முண்முடியைப்பற்றி ஏதாவது தகவல் உண்டா ?

அகஸ்ரீன் : புனிதை கெலனுவினுல் கொன்ஸ்தாந்தி நோப்பிளுக்குக் கொண்டுபோகப்பட்ட கல்வாரியின் உபகரணங்களுள் இதுவும் ஒன்று. கொன்ஸ்தாந்தி நோப்பிளிலிருந்து வெனிசுக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அது முறிந்துபோயிற்று. முறிந்த பகுதிகளைத் தற்காலிகமாகச் சரிசெய்து ஒரு பேழையினுள் வைத்தார்கள்.

அப்பா : இந்த முள்முடி செய்யப்பட்ட செடியைப்பற்றி ஒரு பத்திரிகையில் வாசித்திருக்கிறேன். ஜெருசலேமில் பாதையோரங்களில் இந்தமுட்செடி இன்றும் காணப்படுகிறது. ''கிறிஸ்துவின் முட்கள்'' என அதை அழைக்கின்றனர். இந்த முட்கள் மிகப் பலமும் கூர்மையும் வாய்ந்தவையாம். சேவகர்கள் ஒரு பெரிய முட்கொப்பை வெட்டி வெகுகஷ்டத்துடன் அதை முடியாகப்பின்னியிருக்கவேண்டுமென ஆராய்ச்சியாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர்.

அகஸ்ரீன் : வெனிசுக்கு இம்முடி கொண்டுபோகப்பட்டதெனக் கூறினேனல்லவா ? அங்கிருந்து பிரான்சின் அரசர் புனிதர் லூயிசுக்கு இது கையளிக்கப்பட்டது. பாரிசிலுள்ள புனித கப்பெல்லா ஆலயத்துக்கு அரசர் அதை ஒப்படைத்தார். பின்னர் பரீசிலுள்ள நோட்டரிடாம் மகாலயத்தில் இம்முடி ஸ்தாபிக்கப்பட்டு இன்றுவரை அங்கேயே பாதுகாக்கப்பட்டுவருகிறது. இம்முடியிலிருந்து காலத்துக்குக்காலம் சில முட்களைப் பெயர்த்து வெவ்வேறு ஆலயங்கட்கும் கொடுத்தார்கள்.

ஆஞ்செலா : அப்படியானுல் கர்த்தரின் திருச்சிரசில் தைத்த முட்கள் உலகின் பலபாகங்களிலும் பரவியிருக்கின்றன என்று சொல்லுங்கள்.

நிர்மலா : ஆம் ; வட இத்தாலியிலே அந்திரியா என்னுமிடத்திலேயுள்ள ஒரு தேவாலயத்தில் இந்தப் புனித முட்களுள் ஒன்றைக் காப்பாற்றிவருகின்றார்கள், அந்த முள் சம்பந்தமாகப் பல செய்திகளடங்கிய புஸ்தகமொன்றைச் சமீபத்தில் அன்ரனி தாயாரிடமிருந்து வாங்கிவாசித்தேன்.

அம்மா : என்ன சம்பவம் அது ?

நிர்மலா : இந்தப் புனித முள்ளைப் பொன்னுலான கதிர்ப்பாத்திரமொன்றினுள்வைத்துக் காப்பாற்றிவருகிறார்கள். பெரிய வெள்ளிக்கிழமைகளில் பொது மக்கள் தரிசனத்துக்கு வைப்பார்கள். எந்த வருடத்திலாவது பங்குனிமாதம் 25-ந் தேதி பெரியவெள்ளிக்கிழமையாயிருந்தால் அத்தினத்தில் இந்த முள்ளில் ஒரு பெரும்மாற்றம் காணப்படும்.

அன்ரன் : என்ன மாற்றம் அக்கா?

நிர்மலா : அன்றுதானே மரத்திலிருந்து வெட்டியதுபோல முள்ளும் அதன் தண்டும் பச்சனவாகவும், உயிருடனும் காணப்படும். அத்துடன் முள்ளில் இரத்தத்துளிகளும் காணப்படும்.

அப்பா : இந்தப் புதுமையைப்பற்றி நாங்கள் இதுவரையில் கேள்விப்படவில்லையே ?

கார்மெலா : அது ஏன் பங்குனி 25 பெரிய வெள்ளியானுல்மட்டும் இந்தப்புதுமை ?

நிர்மலா : முதலில் எந்த நூற்றாண்டில் இந்தச்சம்பவம் நிகழ்ந்தது என்பதும் பின்னர் எந்தெந்த ஆண்டுகளில் இப்புதுமை நடைபெற்றது என்பதும் அந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆண்டுகளை இப்போ ஞாபகமாகக்கூற என்னுல் முடியாது. ஆயின் இப்புதுமை பலபேர் முன்னிலையில் பகிரங்கமாகவே நிகழ்ந்திருக்கிறது. பங்குனி 25-ல் பெரியவெள்ளியானுல் பெரிய வியாழனன்றே கதிர்ப்பாத்திரத்தைப் பகிரங்கமாக ஸ்தாபித்துத் திரளான விசுவாசிகளும் திருச்சபை அதிகாரிகளும் காவல் இருப்பர். வியாழனிரவோ அல்லது வெள்ளியன்றோ காய்ந்து மரத்துப்போன முள்ளும் தண்டும் பச்சனவாகத்தோன்றி இரத்தம் சொரியும். சில தினங்கட்கு இக்காட்சி நீடித்திருக்கும்.

இயூஜின் : 1966-ம் ஆண்டில் பெரியவெள்ளிக்கிழமை பங்குனி 25-ல் தான். அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்.

அம்மா : என்றாலும் ஒரு சங்கதியை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். புதுமையினைக்கண்டு விசுவசிப்பதிலும் பார்க்க உண்மையான பக்தியுடன் விசுவசிப்பதே மேல் அல்லவா ?

கார்மெலா : வெரோணிக்கம்மாளுடைய திருமுகந்துடைத்த துவாலையைப்பற்றி ஏதாவது செய்தி உண்டா?

அப்பா : சிலுவை சுமந்துகொண்டு போகுந்தருணத்தில் கிறிஸ்துவின் திருமுகம் வேர்வையாலும், இரத்தத் துளிகளாலும் தூசிமுதலியவற்றாலும் மூடுண்டபோது வெரோணிக்கா திடீரென ஊர்வலத்தின் நடுவே குறுக்கிட்டு அவரது முகத்தைத் துடைக்கும் அத்தைரிய செயலை நிறைவேற்றினுள்.

இயூஜின் : சுவிசேஷ ஆராய்ச்சியாளரும் கல்வி விற்பன்னர்களும் இதைப்பற்றி ஆராய்ந்து வெரோணிக்கா, கிறிஸ்துவின் முகத்தைத் துடைக்கவில்லையென்றும் தன் கையிலுள்ள துண்டினுல் முகத்தில் மெதுவாக ஒற்றினுள் என்றும் கூறுகின்றார்கள்.

நிர்மலா : அதுதான் சரியாக இருக்கும். ஏனென்றால், கிறிஸ்துநாதருடைய முகத்தில் காயங்கள் இருந்தமையால் துண்டினுல் துடைத்தால் அது அவருக்கு மகா வேதனையைக் கொடுத்திருக்குமல்லவா ? எனவே, தன் இரண்டுகைகளாலும் துணியை விரித்து அவர் முகத்தில் மெதுவாகப் போட்டு ஒற்றி எடுத்திருப்பாள்.

அன்ரன் : வெரோணிக்காவின் இச்செயலுக்குப் பிரதி நன்றியாக அத்துவாலையில் தமது முகத்தின் பிரதிபிம்பத்தை எங்களாண்டவர் பதித்தருளினுர்.

அகஸ்ரின் : முகம் துடைக்கும் துவாலையல்ல வெரோணிக்கா கொண்டு சென்றது. அக்காலத்தில் பெண்கள் தலையில் அணியும் வெயில் எனப்படும் சற்று இற[illegible]

700-ம் ஆண்டளவில் பலஸ்தீனுவில் இருந்து ரோமைக்குக் கொண்டுபோகப்பட்டு அர்ச். இராயப்பர் மகாலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

பெரியண்ணு : இந்தப்புனிதை முன்பு பேரினிஸ் என்ற பெயரால் அழைக்கப்பட்டாள். வெயில் என்றதுப்பட்டியில் திருமுக உருவம் பொறிக்கப்படக்காரணமானவள் என்ற காரணத்தால் (Vera—Ikon) வெரோணிக்கா என்ற சிறப்புப் பெயர் அவளுக்கு வழங்கலாயிற்று.


அம்மா : வேறும் ஏதாவது திருப்பாடுகளின் பொருட்கள் உண்டா ?

அகஸ்ரீன் : ரோமாபுரியிலே (Scala—Santa) என அழைக்கப்படும் சில படிகளைக்கொண்ட படிக்கட்டு ஒன்றுண்டு. போஞ்சியுஸ் பிலாத்துவினிடம் நமது இரட்சகர் கொண்டுபோகப்பட்டபோது இப்படிகளின்மீது அவர் ஏறிச்சென்றார். இப்படிக்கட்டுகளைப் பெயர்த்துக்கொண்டு வந்து ரோமாபுரியில் வைத்திருக்கிறார்கள். பரிசுத்தவாரத்தின்போது விசு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)


## விவசாயிகளுக்கோர் நற்செய்தி !

உங்கள் செல்வம்பெருக அதிகஉணவு பயிரிடுக.



நம்பிக்கை! நாணயம்!! விலைநயம்!!!

## மரக்கறி விதைகள்

மரக்கறித் தோட்டமா ? புகையிலைத் தோட்டமா ?
வேறுஎன்ன
பயிர்த்தோட்ட மானுலும்சரி



உங்கள் பயிர்வகைகளை
நாசப்படுத்தும்
கிருமிகளை
(பூச்சி புழுக்கள்)
அழிப்பதற்கான மருந்துவகைகளும்,
தெளிப்பதற்கும்
தூவுவதற்குமான

சிறந்த பெரிய
அளவு ஸ்பிரேயர்
(SPRAYERS)

எங்களிடம் சகாயவிலைக்கு
பெற்றுக்கொள்ளலாம்.

இனும்!
ஸ்பிரேயர் வாங்குபவர்களுக்குத்
திறம் அமெரிக்கன் சிறிய அளவு
ஸ்பிரேயர் (HAND SPRAYER)
இனுமாக வழங்கப்படும்.




* * *

விபரங்களுக்கு எழுதவும் :

எஸ். ஏ. பெர்னுண்டோ,
தபால்பெட்டி 16, நுவரெலியா.

தந்தி : "பாத்திமா" தொலைபேசி : 283


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்துகாய வரம்பெற்ற சுவாமி பீயோ

(மேன்மைதங். R.A. சூந்தரம், தஞ்சை மேற்றிராணியார்)

நெடுங்காலமாகக் கத்தோலிக்க திருச்சபையிலே மட்டும் நமது ஆண்டவர் யேசுவின் . ஐந்து திருக்காயங்களைப் போல் தங்களின் உடல்களிலும் ஐந்து காயங்களைப் பெறும் வரம்பெற்ற ஆண்பாலாரும், பெண்பாலாரும், இருந்திருக்கின்றனர். இது தனிச்சிறப்புக்குரிய ஒரு காரியமே. பழுத்த அனுபவமும் ஞானமும் அமைந்த திருச்சபை ஐந்துகாயவரம்பெற்ற இவர்களைப் பற்றி உத்தியோகபூர்வமாக யாதொரு முடிவும் செய்ததுமில்லை இவர்களுக்கு, ஐந்துகாயவரம்பெற்ற ஒரேகாரணத்தை முன்னிட்டு அர்ச்சியசிஷ்டபட்டம் அளித்ததுமில்லை. எனினும் ஐந்துகாயவரம்பெற்ற இவர்கள் பக்தியுள்ளவர்கள். கிறிஸ்துவமக்கள் திரள் திரளாக வந்து தங்களுக்காக வேண்டிக்கொள்ளும்படி இவர்களைக் கேட்கவும் இன்னல் தொல்லைகளில் இவர்களின் அறிவுரையைத் தேடவும் செய்கின்றனர். பலதடவைகளில் ஐந்துகாய வரம்பெற்றவர்களைப்பற்றித் தீர்க்கதரிசனவரம், ஒரேசமயத்தில் இரண்டு இடங்களில் இருத்தல், பிறர் எண்ணங்களைப் படித்தறிதல், கடவுளிடம் மனுப்பேசுதல் போன்ற தனிச்சிறப்புச் சம்பவங்கள் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. 20-ம் நூற்றூண்டில் ஜேர்மனியில் காலஞ்சென்ற தெரேசா நியூமன் வாழ்ந்திருந்தார். இப்போது இத்தாலியில் 76 வயதுள்ள கப்புச்சின் துறவி ஒருவர் வசிக்கிறார். இவர் பொதுவாக ஐந்துகாயவரம்பெற்ற சுவாமி பீயோ என்று அழைக்கப்படுகிறார். இவரின் பெயரும் வாழ்க்கையும் ஒரு புதுமையான கதைபோன்றவை. தென் இத்தாலியாவில் சான் ஜொவான்னி ரொதோந்தோ என்னும் இடத்தில் பீயோ சுவாமிகள் வதிகின்றார். அவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்வதற்கு அல்லது தங்களுக்காக வேண்டிக்கொள்ளுமாறு அவரைக் கேட்பதற்கு அல்லது அவரைக்கண்டு அவருடைய ஆசிமொழி பெறுவதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வருகின்றனர்.

1915-ம்ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கப்புச்சின் துறவி சுவாமி பீயோ அவர்கள் 28-வது வயதில் சான் ஜொவான்னி ரொதோந்தோ · என்னும் நகரத்திலுள்ள துறவற இல்லத்தின் பாடற்குழுவினர் பகுதியில் இருக்கும்போது ஐந்துகாயவரம்பெற்றார். அவருக்கு எதிரே சைப்ரஸ் மரத்தால் செய்யப்பட்டசுரூபம் தொங்கிக்கொண்டிருந்தது. அவரை அடுத்து சுவாமி ஆர்க்காஞ்சலோ என்னும் வேறு ஒரு கப்புச்சின் துறவி இருந்தார். • இவர் சுவாமி பீயோவின் கரங்களிலிருந்து இரத்தம் "குபு குபு" என்று வடிவதைக் கண்டார். உடனே துறவற இல்லத் தலைவரும், அந்த இல்லத்தின் இதர துறவோரும், உலக மக்கள் அனைவருமே சுவாமி பீயோவின் கைகளிலும், கால்களிலும், விலாவிலும் ஐந்துகாய வரம்பெற்றிருந்ததை அறிந்தார்கள். மருத்துவ வல்லுநர்களைத் தலைவர் அழைத்து அற்புதமாகத் தோன்றிய அக்காயங்களை ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டார். அவர்களுக்கு எல்லாம் புதிராகவே தோன்றியது. விந்தையாகக்காணப்பட்ட அக்காயங்கள் மருந்துகட்டியபிறகும் ஆறவில்லை. எனினும் அவைகள் அழுகி நாற்றம் வீசுவதில்லை.

இந்நிகழ்ச்சியை மக்கள் மிகைப்படுத்திக் கூறியதாலும் பொய்ப்பிரசாரம் செய்ததாலும் சுவாமி பீயோ தமது துறவற இல்லத்தின் மறைவிடத்தை விட்டு நீங்குதல் கூடாது என்று கட்டளைபிறந்தது. சுவாமி அவர்கள் அதற்குப்பணிந்தார். ஆனல், 1939-ம் ஆண்டிலிருந்து இந்தத்தடை ஆணை நீங்கியது. இன்றுவரை கிறிஸ்துவமக்களும், குருக்களும், துறவறத்தாரும், மேற்றிராணிமார்களும் பீயோ சுவாமிகளைத் தரிசித்து வருகின்றனர்.

சுவாமி பீயோ அவர்களைத் தரிசிக்கவேண்டும் என்னும் ஆவல் எனக்கு இருந்தவந்தது. வேலைமிகுதியான நாட்களில் அவரைச் சந்தித்துப் பேசுவது கடினமாக இருக்குமாதலால் உரோமை நகரில் கப்புச்சின் சபைப் பிரதம தலைவர் பேரருட் திரு. சுவாமி கிளமென்ட் அவர்களிடமிருந்து அறிமுகப்படுத்தும் மடல் ஒன்று பெற்றேன். இம்மடலின் துணையோடு மேன்மைதங்கிய தூத்துக்குடி, சேலம் ஆண்டகையர், இப்போது பெல்லாரி மேற்றிராணியாராக நியமனம்பெற்றிருக்கும் பேரருட் திரு. மொன்சிஞ்ஞோர் அம்புரோஸ் ஆகியவர்களோடு சென்ற நவம்பர் பிற்பகல் 1-30 மணிக்கு உரோமையிலேயே மிகப் பெரிதாகிய "Stazione Termini" என்னும் இரயில் நிலையத்திலிருந்து 'Rapido' என்னும் துரித வண்டியில் புறப்பட்டோம். 250 கற்களுக்கப்பால் உள்ள போகியா என்னும் நகரத்துக்கு மாலை 6-15 மணிக்கு வந்துசேர்ந்தோம். நாங்கள் நான்குபேரும் 20 கற்களுக்கப்பால் உள்ள சான் ஜொவான்னிக்குப் பஸ்சின்மூலம் ஒருமணி நேரத்தில் வந்துசேர்ந்தோம். எங்கள் வருகைபற்றி முன்கூட்டியே துறவற இல்லத்தின் கண்காணிப்பாள சுவாமிகளுக்கு நாங்கள் எழுதியிருந்ததால் அவர் எங்களை அன்புகலந்த உபசரணையோடு வரவேற்றூர். எங்களைப்போல் இன்னும் இரண்டு மேற்றிராணிமார் துறவற இல்லத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் கோலாலம்பூர் மேற்றிராணி ஆண்டகை மேன்மைதங்கிய தோமினிக்வேந்தர்கோனும், தென் அமெரிக்க மேற்றிராணி ஆண்டகை ஒருவருமாவர். இரவு உணவுக்குப்பின் எங்கள் ஒவ்வொருவருக்கும் உறங்குவதற்கு நேர்த்தியான ஓர்அறை கொடுக்கப்பட்டது. கண்காணிப்பாள சுவாமிகள் சுவாமி பீயோ பகல்நேரத்திலும் இரவிலும் தங்கியிருக்கும் இரண்டு அறைகளை எங்களுக்குக் காண்பித்தார். பகல்நேரத்தைக் கழிக்கும் அவருடைய அறையின் கதவில் கிறிஸ்துநாதர் அநுசாரத்திலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட வாக்கியம் எழுதப்பட்டிருந்தது. "சிலுவை எப்போதும் உனக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருக்கிறது. எவ்விடத்திலும் உனக்காக அது காத்திருக்கிறது." அவர் இரவில் தங்கும் அறையின் கதவில் "மரியன்னை என் நம்பிக்கையின் அடிப்படைக் கல்லும் ஆரம்பஸ்தானமும் ஆவர்" என்னும் வாக்கியம் பொறிக்கப்பட்டிருந்தது. கண்காணிப்பாள சுவாமிகள், அடுத்தநாள் காலையில் நாங்கள் சுவாமி பீயோ அவர்களைச் சந்திக்கலாம் என்றும், விரும்பினுல் காலை 4-30 மணிக்கு அவரின் திவ்விய பலிபூசையும் காணலாம் என்றும் எங்களுக்கு அறிவித்தார். பீயோ சுவாமிகளின் பூசை காண்பது எங்களுக்கு ஒரு தனி அநுபவ நிகழ்ச்சியாக இருந்தது. அவர் துறவற இல்லத்தின் சிற்றூலயத்தில் பூசைசெய்தார். அவ்வாலயம் விசுவாசிகளால் நிறைந்திருந்தது. ஆழ்ந்த பக்தி உருக்கத்தோடும் மன ஒருமிப்போடும் பூசைசெய்தார். ஒப்புக்கொடுக்கும் பகுதியில் 15 நிமிஷநேரத்தைக் கழித்தார். தமக்குப் பலரால் குறிக்கப்பட்டிருந்த கருத்துக்களை அப்போது புதுப்பித்தார் போலும். திவ்விய நன்மை உட்கொண்டபின் அசைவற்று நின்றுகொண்டு 15 நிமிஷ நேரத்தை ஆண்டவருக்கு நன்றிசெலுத்துவதில் செலவழித்தார்.

இதன்பின், நாங்கள் சிற்றூலயத்தின் பக்கத்துப் பீடங்களில் பூசை செய் த[illegible] சுவாமி பீயோ அவர்களை வழியில் சந்திக்கச்சென்றோம். இந்நேரத்தில் அவர் விசுவாசிகளுக்குப் பாவசங்கீர்த்தனம் கொடுப்பது வழக்கம். கோலாலம்பூர் மேற்றிராணி ஆண்டகை அவர்களும் நானும் முதலில் பீயோ சுவாமிகளைச் சந்தித்தோம். நான் அவரிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்தபிறகு நமது மேற்றிராசனத்துக்காகவும் குறிப்பிட்ட சில கருத்துக்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டேன். பிறகு மற்ற மேற்றிராணி ஆண்டகைமார் அவரைச் சந்தித்தார்கள்.

காலை உணவுக்குப்பின் நாங்கள் சுவாமி பீயோ அவர்கள் பாவசங்கீர்த்தனம் கேட்டபிறகு திரும்பிவருகிற வழியில் அவர்களைச் சந்திக்கும் நோக்கத்தோடு மேல்மாடியில் காத்திருந்தோம். கப்புச்சின் துறவி ஒருவரிடம், பீயோ சுவாமிகளோடு எங்களின் சந்திப்பின் நினைவாக புகைப்படம் எடுக்கமுடியுமா என்று நான் கேட்டேன். பீயோ சுவாமிகளின் இசைவுபெற்று எடுக்கலாம் என்று அவர் சொன்னூர். சிறிதுநேரத்தில் அவர் பாவசங்கீர்த்தனம் கேட்டபிறகு தமது அறையைநோக்கி வந்துகொண்டிருந்தார். நாங்கள் வழியில் அவரைச் சந்தித்தோம். அவருக்குக் காலைவணக்கம் செய்தபிறகு எங்களோடு ஒருபுகைப்படம் எடுக்கவேண்டுமென்று கேட்டேன். சாந்தத்தோடு சிறிது மறுப்புக் கூறியபிறகு இசைந்தார். அவ்விடத்துக்குரிய புகைப்பட எடுப்பாளரால் எங்கள் புகைப்படம் எடுக்கப்பட்டது. பின்னர், எங்கள் மேற்றிராசனங்களுக்குத் திரும்பிய பின் எங்கள் ஞானமக்களுக்குக் கூறுவதற்குரிய சில அறிவுரைகள் நல்குமாறு நான் சுவாமி பீயோ அவர்களைக் கேட்டேன். உடனுக்குடன் வழங்கப்பட்ட அவரின் அறிவுரைகள் பக்தி உருக்கம் நிறைந்தவை. அவைகளிற் சில: "நம் ஆத்துமங்களை மீட்டு, பிறர்க்கு மேல்வரிச்சட்டமாக இருக்க வேண்டுமெனில் நாம் நன்மையில் நிலைத்து நிற்போம்." "நன்மை நிறைந்த கடவுள் மனஸ்தாபமுள்ளவர்களைப் புறக்கணிக்காது, மிகவும் கடின இருதயங்களையும் தேடிச்செல்லுகிறார்." "கடவுளின் இரக்கம் நம் பாவங்களைவிட அளவுகடந்த வகையில் பெரிது." "பேய் நம் ஆத்துமங்களில் புகுவதற்குரிய கதவு போன்றது நம் மனம், இதைத்தவிர வேறு இரகசியக் கதவில்லை." "என் கடந்தகாலத்தை உமது இரக்கத்துக்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# செல்வோம் சிலுவையின் ஸ்தலங்களிலே

[முன் தொடர்ச்சி]

### VIII

பெருகும் கண்ணீர் வெள்ளத்துடன், நெருங்கி உம்மைப் பின்சென்ற
ஜெருசலேம் மாதருக்காறுதலே, மொழிந்த ஜெக மீட்பரே!
"பெருகும் உலகின் பவத்தினுக்காய், பதைத்துத் துடித்து அழுங்க "ளென்நீர்
விரவும் ஆன்ம நோயதனை விரட்ட முனைந்தே கண்ணீரைச்
சொரிய வேண்டியதும் நானல்லவோ ?

### IX

மூன்றும் முறையும் முகங்கவிழ, மூர்ச்சையுற்றே வீழ்ந்திடவே
ஏந்தும் ஆயுதத்தால் யூதர், இடிக்க நொந்த எம்பரனே!
வீம்பாய் எண்ணம் கொண்டுள்ளத்தில், வீண்பெருமை யுற்றதனல்
தோன்றும் நீச நோக்கம் விட்டு, தூயவுந்தன் வழியைப்பற்ற
தாழ்ந்திட வேண்டியதும் நானல்லவோ ?

### X

தோலுரித்தது போல உன்மேல், ஒட்டியிருந்த உடையதனை
நாலுபக்கமும் இழுத்துரிய, நடுக்கமுற்ற நாதரே!
மேலும் மேலும் மலிந்துவரும், மோகபாவ இச்சை போக்க
காலும் கண்ணீர் சிந்திநாளும், கடினதபம் புரிந்ததனைப்
போக்கிட வேண்டியதும் நானல்லவோ ?

### XI

நெடிய சிலுவை யதனின் மேலே, கடிதில் பற்றியும்மை வீழ்த்தி
கொடிய யூதர் அறைந்திடவே, நடுங்கி நொந்த நாதரே!
கடின எந்தன் நெஞ்சினையே, கலக்குமுலகக் கவலை போக்கி
விடிவு பெற்றுன் சிலுவையுடன், விரைவிலெனைப் பிணைத்தறைந்தே
வாழ வேண்டியதும் நானல்லவோ ?

### XII

நிந்தை மிகு சிலுவைமீது, நீண்டநேரம் தொங்கியபின்
எந்தனுக்காய் உயிரைவிட்ட, நாதரே! என் நம்பிக்கையே!
பந்தபாசம் விட்டுநீங்கி, பரகதியில் உம்மோடென்றும்
சொந்தமாகி இன்பம்துய்க்க, சோர்விலாதுன் சிலுவையடியில்
சேர்ந்திட வேண்டியதும் நானல்லவோ ?

### XIII

கொடிய பாடுபட்டுயிரை, நீத்தபின்னர் உந்தன் அன்னை
மடியின்மீதே கிடத்தியழ, மாண்பு பெற்ற மீட்பரே!
ஒடிந்துபோகும் உள்ளத்துடன், உலகவாழ்வைக் கழிக்கையிலுன்
அடியைப் பின்பற்றிச் சென்றே, அன்னைமடியில் தலையைச் சாய்த்தே
அன்புசெய்ய வேண்டியதும் நானல்லவோ ?

### XIV

செதுக்கி வைத்த கல்லறையில், சோதிவீசும் உன்னுடல்
ஒதுக்கமாக அடக்கஞ்செய்தார், ஒப்பரிய தேவதேவா!
நெருக்கமாக எனைப் பிடிக்கும், நெடுந்துயரச் சுமையையெல்லாம்
விருட்டெனவே விட்டெறிந்து, விண்ணுலக வாழ்வதனை
விரும்ப வேண்டியதும் நானல்லவோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி ஆசீர்வாதம் சலோமை
அவர்களின்

## 4-ம் வருட மரண ஞாபகம்
## 30—3—64

"சீவியத்தில் நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்."

எங்கள் குடும்பத்தின் மத்தியில் ஜெயசோதியாய்ப் பிரகாசித்து தன் சீவியத்தில் உற்ருர், உறவினர், மற்றையோர்களையும் அன்புடன் நேசித்தவரும், மண்ணில் நின்று மறைந்தாலும் எம் கண்ணை விட்டு மறையாத என்னருமை மனைவியும், எங்களருமைத் தாயாருமான திருமதி ஆசீர்வாதம் சலோமை மண்ணுலகை விட்டு மறைந்த 4-ம் வருடம் 30-3-64-ல் பூர்த்தியாகிறபடியால் அன்று இளவாலை சந்தியோகுமையோர் கோவிலில் ஒரு பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் யாவரும் இவ்வான்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படி வேண்டுகின்ருேம்.

கணவன் : த. ஆசீர்வாதம்,

நேசத்தாயை இழந்து தவிக்கும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

சென் யேம்ஸ் லேன்,
இளவாலை.

திரு. இ. யேசுதாசன் சிவப்பிரகாசம்
அவர்கள்

## அமரத்துவம் அடைந்த
## 4-ம் வருட ஞாபகம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25—5—1913 | 29—3—1960 |

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்தில் என்னை மறவாதீர்கள்."

எனது நேசபத்தா என்னையும், தன் இனசனர்களையும் விட்டுப் பிரிந்த நாலாவது வருடம் வருகிற 29-3-64 ஞாயிற்றுக்கிழமை பூர்த்தியாகிறது. இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 30-ந் திகதி திங்கட்கிழமை சூராவத்தை அர்ச். திரேசம்மாள் கோவிலில் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் அனைவரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

இவரின் பிரிவால் துயருறும் பிரிய திரேசா சற்குணமும் மற்றும் இனசனர்களும்.

திரேசாவாசம்,
சூராவத்தை.
சுன்னுகம்,

## 2-ம் வருட மரண ஞாபகம்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20-3-1962 | 23-3-1964 |

எமது ஒரே புதல்வி செபமாலை இராக்கினி எம்மைவிட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த ஈராண்டு பூர்த்தியாகிறது.

இவவின் நினைவுதினப் பூசை 23-3-64 திங்கட்கிழமை காலை 7மணிக்கு நீர்வேலி, பரிசுத்த பரலோகமாதாகோவிலில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவவின் பிரிவால் துறருறும் தந்தை: யோசேப்பு சூசைப்பிள்ளை தாய்: புதுமை

—நீர்வேலி.

## தாகமாய்....

( 4-ம் பக்கத்தொடர்ச்சி )

போலக் காண்கிருர். ஒவ்வொரு நிமிடமும் நரகக்குழியில் பேயுடன் தள்ளப்படும் ஆத்துமங்களைக் கண்டு மனமுடைகிருர். இவ்வுலகில் சாவான பாவத்துடன் அலைந்துதிரியும் ஆத்துமங்களைக்கண்டு துக்கிக்கின்ருர். அவர்களைக் கடவுள் பாதம் சேர்க்க ஆசிக்கின்ருர் ; தாகமாயிருக்கிருர்.

ஆனல் அந்தோ அவரின் கால்களும் கைகளும் சிலுவையில் இருப்பாணிகளால் அறையப்பட்டிருக்கின்றன. அவருடைய தலையில் முள்முடி சூட்டப்பட்டிருக்கின்றது. புண்களிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருக்கின்றது. இந்த நிலையில் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் எங்கள் ஆன்ம அன்பர் எங்களை உற்றுநோக்குகிருர். எங்களைத் தம்மிடம் அழைக்கிருர், அவர் கூறுகிருர் :

"என்நேச மகனே ! மகளே! இதோ என்னைப்பார் : என் நிலையை நோக்கு: இப்பொழுது நான் மிகவும் "**தாகமாயிருக்கிறேன்**" என் தாகத்தை நீ தீர்த்துவிடு. என் தாகம் தண்ணீர்த் தாகம்மட்டுமல்ல; ஆனல், முக்கியமாக ஆத்தும தாகம் என்பதை நீ நன்ருய் அறிவாய். இப்பொழுது என்னல் ஆத்துமங்களைத் தேடியலையமுடியாது. ஏனெனில், என் கால்களும், கைகளும் இப்பரிசுத்த சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டிருக்கின்றன. நீயே இப்பொழுது என் கால்களும், கைகளுமாயிருக்கிருய். நீயே என் வார்த்தைகளை மக்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டும். நீயே அவர்களை என்னிடம் கொண்டுவந்து சேர்க்கவேண்டும், இதுவே நீ என் தாகத்தைத் தீர்க்கச் செய்யவேண்டிய வேலை."

இதுவே சிலுவையில் அறையுண்டிருக்கும் நேசயேசுவின் வேண்டுகோள். அவரின் வேண்டுகோள் நம் எல்லோரின் மனங்களையும் கவரவேண்டும். ஆகவே அண்ணல் யேசுவின் அரும் பெரும் தாகத்தை, ஞான தாகத்தை,ஆத்துமதாகத்தைத்தீர்க்கப் பெரியோரும் சிறியோரும்,கற்ருேரும், கல்லாதோரும், பணக்காரரும், ஏழைகளும் விழைவோம் ; அதற்காக மன்ருடுவோம்.

## மரண அறிக்கை

தெல்லிப்பளையைச் சேர்ந்த வீமன்காம் என்னும் கிராமத்தை ஜெனனபதியாகக் கொண்டவரும் யாழ்ப்பாணப்பட்டின வாசரும், பிரபல சுருட்டுத் தொழிற்சாலைச் சொந்தக்காரருமான திரு.அந்தோனிப்பிள்ளை வின்சென்ற் என்பவர் சென்ற ஒரு வருடகாலமாக நோயுற்றிருந்து எவ்வித சிகிச்சைகளுக்கும்குணமுருது ஈற்றில் அந்திம தேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுச் சென்ற 11-3-64 புதன்கிழமை பிற்பகல் 3-15மணியளவில் தமது ஆன்மாவை இறைவன் திருவடிநிழலில் ஒப்படைத்தனர். மறுநாட் சாயந்தரம் இவருடைய சடலமானது அழகானபேழையில் வைக்கப்பட்டு இனசனர் சிநேகிதர்புடைசூழச் சேமக்காலை கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. இவருக்கு இரு புத்திரரும் இரு புத்திரிகளுமுளர். இவரை இழந்து துன்புறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் நாமும் அனுதாபப் படுகின்ருேம்.

—நிருபர்

### நம் பத்திரிகை

பரிசுத்த வாரத்தையிட்டு வழமைபோல நம்பத்திரிகை அடுத்த 28-ந்தேதி சனிக்கிழமை வெளிவரமாட்டாது. வருகிற சித்திரை மாதம் 4-ந்தேதி சனிக்கிழமையே வெளிவரும்.

## பரிசுத்தர்........

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கைப் பாதையைத் திரும்பிப்பார்க்க வேண்டும். எழுந்துபோய் என்பிதாவிடம் மன்னிப்புக்கேட்பேன் என்ற துணிவு பிறக்கவேண்டும். அன்புத் தலைவரான யேசுவைப் பணத்திற்கு விற்று, காட்டிக்கொடுத்த நிர்ப்பாக்கிய அப்போஸ்தலன் யூதாசின் அவலப் போக்கிலல்ல. நினைக்கமுடியாத பாவத்தை மன்னிக்கும் வல்லமைஉள்ளவர் என்று அறிந்தும், அவநம்பிக்கையில் மாண்டான். ஆனல், பாக்கியசாலியான இராயப்பரைப்போல கொடிய துரோகம் செய்தது உண்மை. ஆனல், தவறை உணர்ந்து கண்ணீர் வடித்தார். யேசுவின் அளவுகடந்த இரக்கத்தில் நம்பிக்கையிருந்தது. தாமதிக்கவில்லை.

யேசுநாதர் உலக நியதிக்குமேல் ஒரு நியதியை ஏற்படுத்த வந்த தூயோன். உலக போக்கிற்கு எதிராக ஒரு போக்கை ஆணித்தரமாக ஏற்படுத்தினர். எல்லாம் கடந்துநின்ற பரிசுத்தர் கைக்கு எட்டுகிருர். பாவியோடு கைகோர்க்கிருர். உலகம் தன் எதிரிகளை ஒழித்துக்கட்டுகிறது; ஆனல், கிறிஸ்துவும், அவருடைய தூய்மைபெற்ற திருச்சபையும், அதின் செல்வமக்களாகிய புனிதர்களும் பாவிகளுக்காகவே வாழ்வார்கள். உலகம் முடியுமட்டும் அவர்கள் பணி இதுவே.

உணர்ந்த உள்ளம்
அனுரதபுரி.

இலங்கை வானெலி தேசிய
ஒலிபரப்பு

### பரிசுத்தவார
### கத்தோலிக்க நிகழ்ச்சிகள்

பங்குனி 27-ந்திகதி
பெரிய வெள்ளிக்கிழமை
காலை 9-30 முதல் 11-00 வரை
அதிவண. சற். என். குரூஸ்,
ஓ. எம். ஐ. சுவாமியவர்களால்
திருச் சிலுவைப்பாதைப் பக்தி
முயற்சி நடத்தப்படும்.
பாடகர்கள் :
நீர்கொழும்பு, கடற்கரைத்தெரு.

●

பங்குனி 28லிருந்து 30வரை
காலை 6-55முதல் 7-00வரை
"நற்சிந்தனை"
பேசுபவர் : வண. ஜே. எம்.
சவரிமுத்து, ஓ. எம். ஐ.
சுவாமியவர்கள்.

●

பங்குனி 29-ந் தேதி
"உயிர்த்த ஞாயிறு"
மாலை 5-45முதல் 6-00வரை
பாஸ்குச் செய்தி
பேசுபவர் : வண. எம். வி.
இராய்ப்பு, ஓ. எம். ஐ.
சுவாமியவர்கள்.

உல்லாசவேளை

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

வாசிகள் இப்படிகளில் முழந்தாளில் நடந்துசென்று கர்த்தரின் திருப்பாடுகளைத் தியானிப்பர். (தொடரும்)


விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி : "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன் : 496.
கிளை
தந்தி : "AUTOS" வவுனியா. டெலிபோன் : 577.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பங்குனிமாதம் 21-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org